எழுத்து

ஏழாம் ஆண்டு

ஆசிரியர்: சி.சு.செல்லப்பா

ஏழு ஆண்டுகள்
தலையங்கம்

மலடு (சிறுகதை)
கே. ராமசாமி

நாடு என் உயிர்
எஸ். வைதீஸ்வரன்

படைப்பு மனம்
தர்மூ சிவராமு

பாரதப் போர்
சு. சங்கரசுப்ரமண்யன்

எதிர்ப்பு (சிறுகதை)
சி. சு. செல்லப்பா

பாரதிதாசன்—அழகின் சிரிப்பு
சி. கனகசபாபதி

திட்டம்
தி. சோ. வேணுகோபாலன்

பத்திரிகைகளின் உத்தேசம்
சி. சு. செ.

மறு அறுவடை
சிக்ஃபிரிட் சாஸூன்

டிசம்பர் 65

84

50 பைசா

7-ம் ஆண்டு
ஏடு 84
டிசம்பர்
1965

எழுத்து

ஆசிரியர் :
சி. சு. செல்லப்பா

தலையங்கம்

ஏழு ஆண்டுகள்

அன்புள்ள வாசகர்களே, உங்களோடு நின்று பேசி ரொம்பநாள் ஆகிவிட்டது. 'தீபாவளிக்கு தீபாவளி குளிக்கிற'மாதிரி ஆண்டுக்கு ஒரு தரம் வருஷ ஆரம்பத்தில் 'எழுத்து' நிலைபற்றி ஏதோ தெரிவித்துக் கொள்வதோடு சரி. ஆச்சு, இப்போது எழுத்துக்கு ஏழு வயது முடிந்துவிட்டது இந்த ஏட்டோடு. நினைத்துப் பார்க்கிறபோது எனக்குள் சொல்லிக்கொள்கிறேன் 'எழுத்து எட்டாவது ஆண்டுக்குள் நுழைகிறது' என்று. கொஞ்சம் அதிசயமாகவே படுகிறது இது எனக்கு உங்களுக்கும் அப்படித்தான் இருக்கலாம், இல்லையா?

கொஞ்சம் முதல் அத்யாயம். 'மணிக்கொடி' மரபில் வந்த கடைக்குட்டிக்கு முந்தினது 'எழுத்து'. மணிக்கொடி, சுதந்திரச் சங்கு, சூறாவளி, பாரததேவி, கலாமோஹினி, கிராம ஊழியன், தேனீ, சக்தி, சிந்தனை, சந்திரோதயம், சரஸ்வதி, இலக்கியவட்டம் இதெல்லாம் சென்ற சுமார் முப்பத்தைந்து ஆண்டுக் காலத்தில் இன்றைய இலக்கியம் வளர்த்த சின்னப்பத்திரிகைகள். எந்த நாட்டு இலக்கிய வளப் பெருக்கத்தைப் பார்த்தாலும் இது மாதிரி சின்னப் பத்திரிகைகளால்தான் அது சாத்யமாகி இருக்கிறதை பார்க்கிறோம். இன்றும்கூட அநேகமாக அதே நிலைதான்.

ஆனால் மணிக்கொடி முதல் இலக்கிய வட்டம் வரை மேலே குறிப்பிட்ட பத்திரிகைகள் எதுவும் எழுத்து இன்று எட்டிக்கொண்டிருக்கிற வயதுக்கு தாக்குப்பிடிக்கவில்லை. அது ஒரு சோக வரலாறு தான். இந்த உணர்வோடுதான், இந்த ஒன்றுவது 'பாலாரிஷ்டம்' தாண்டி இன்றுவரை நடமாட முடிந்திருக்கிறதே என்று நினைத்துக் கொள்கிறேன். மேலே குறிப்பிட்ட அத்தனை சின்னப் பத்திரிகைகளும் அதனதன் தனித்தன்மையான உத்தேசங்களுடன் சோதனைகளுடன் சாதனைகளுடன் இன்றும் தொடர்ந்து நடமாடிக் கொண்டிருக்குமானால்—? இவை மீண்டும் வெளிவந்து, தங்களைப் பெற்றெடுத்தவர்கள் கையிலேயே வளர்ந்து இன்று தமிழ் மணம் பரப்பக்கூடுமானால்—? கனவுதான் இது. நனவாகக் கூடாது என்பதில்லையே?

தனிமரம் தோப்பாகாதுதான். இருந்தாலும் அது விடும் இரண்டொரு குரும்பை நாலைந்து பிஞ்சையாவது அது கொடுக்கிறதை வேண்டாம் என்று சொல்லத் தோன்றுமா? இந்த ஏழு ஆண்டுகளாக எழுத்து அடக்கமாக செய்துவருவது இது தான் நல்ல பழங்களைத்தர அது வாய்ப்பை எதிர் பார்த்து எட்டாவது ஆண்டுக்குத் தொடர்கிறது. இந்த ஏழு ஆண்டுகளாக இந்த அளவுக்காவது அது சாதிக்க வாய்ப்பு தந்தவர்கள் வாசகர்கள்—அதன் சந்தாதாரர்கள். அவர்கள் ஆதரவில்தான் அது ஏதோ நடக்க முடிந்திருக்கிறது.

'ஏதோ' என்கிற வார்த்தையை ஒட்டி சில வார்த்தைகள். அடக்கமாகத்தான், அவசியத் தேவைக்கும் குறைவாகத்தான், மற்ற சின்னப் பத்திரிகைகளுக்குப் போலவேதான் தமிழக வரவேற்பு இருந்திருக்கிறது இந்த ஏழு ஆண்டுக் காலத்தில். இது போதாது 'எழுத்து'வின் எதிர்கால உத்தேச நிறைவேற்றங்களுக்கு தமிழ் இலக்கிய ஆர்வம் எனக்கு கொடுத்திருக்கிற தாக்குப் பிடிக்கிற சக்திதான் எழுத்துக்கு மூலதனம் இது வரையில் இந்த சக்தி அதிகம் சோதனைக்குள்ளாகி விடக்கூடாது. எனவே இந்த ஆண்டு தமிழகத்தின் கொஞ்சம் தாராளமான ஆதரவை எதிர் பார்க்கிறேன். கிடைக்கும் என்ற நம்பிக்கை.

இது நிறைவேற வழிவகைகள் கையாள்வது முக்கியம். சரக்கு முறுக்கு இருந்தால் மட்டும் போதாது இன்றைய நடப்பு உலகில். தேடி வந்து வாங்குவார்கள் என்று சொல்லமுடியவில்லை. கொண்டுபோய் காட்டியாக வேண்டி இருக்கிறது. விற்பனை முறுக்கு தேவை இன்று. எனவே பரீட்சார்த்தமாக சென்ற மூன்று ஏடுகளாக 'எழுத்து' கடைகளில் கிடைக்கச் செய்த முயற்சியை தொடர்ந்து, வரும் ஆண்டில் எழுத்து வாசகர்களைத் தேடிப் போகச் செய்ய திட்டமிட்டு வருகிறேன்.

எழுத்து சந்தாதாரர்களிடம் நான் எதிர் பார்ப்பதுதான் முடிவாகச் சொல்ல விரும்புகிற விஷயம். அநேகமாக பெரும்பாலோருக்கு இந்த ஏட்டுடனே ஆண்டுச் சந்தா தவணை தீர்ந்துவிடுகிறது. ஜனவரி முதல் ஆரம்பமாகும் புது ஆண்டுக்கு உங்கள் சந்தாவை இந்த ஏடு கிடைத்ததுமே தாமதிக்காமல் அனுப்பிவைக்கும்படி கேட்டுக் கொள்கிறேன். எழுத்து புதிய ஆண்டு சந்தா விகிதம் ரூ. 6·00. பக்கங்களை கொஞ்சம் அதிகப்படுத்திதர உத்தேசித்திருப்பதால் இந்த சிறு உயர்வு. இதோடு இன்னொரு யோசனையும் கூட.

எழுத்து ஆரம்பத்தில் மூன்றாண்டுச் சந்தா முறை இருந்தது. இப்போது மீண்டும் அந்த ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது. மூன்று ஆண்டுகளுக்கு சலுகை சந்தாவாக ரூ. 15·00. எழுத்து சந்தாதாரர்கள் ஒவ்வொருவரும் இந்த மூன்றாண்டுச் சந்தாவைப் பயன்படுத்திக் கொள்ளும்படி கேட்டுக்கொள்கிறேன். 'எழுத்து'வை அடுத்த ஏடு முதலே சிறப்பாக கொண்டுவர, ஏடுக்கு ஏடு

(235—ஆம் பக்கம் பார்க்க)

[1935-ல் 'மணிக்கொடி' இதழில் வெளியான சிறுகதை இங்கு எடுத்துத் தரப்படுகிறது. அதன் இலக்கிய மேன்மையைப் பெரிதுபடுத்திக் காட்டுவதற்காக அல்ல. அந்தக்கதையைப் படித்த கையோடு 'ஆனந்த விகடன்' 7–11–1965 இதழில்வெளியாகியுள்ள ''மனைவியே குழந்தை ஆனுல்'' என்ற முத்திரைக் கதையையும் படிக்கும்படி சிபாரிசு செய்வதற்காகவே இரண்டு கதைகளின் கருவும் ஏகதேசம் ஒன்றுபட அமைந்திருப்பதால், பின்னுல் வெளியானது முந்தியதின் தழுவல் என்கிற முடிவுக்கு நாம் வரவில்லை. முதல் கதையைப் படிக்கிற வாய்ப்பே இரண்டாவது கதையின் ஆசிரியருக்குக் கிடைத்திருக்காது நம்முடைய வலியுறுத்தல் இதுதான், கதைக் கருவில் புதுமை, புரட்சி என்றெல்லாம் இன்று பலபடப் பேசினுலும் முப்பது ஆண்டுகளுக்கு முன்பே அநேகமாகக் கையாளப்பட்டே இருக்கிறது. 2. இலக்கிய விழிப்பின் துவக்க காலமாகிய அன்றே, இன்றளவும் பிரபலமாக நின்று நிலவும் எழுத்தாளர் வரிசையில் தேராத ஒருவர் தனது ஆரம்பப் படைப்பை நேரடி நிதானத்துடன், கதைக்கருவின் வலு வாசகன் மனதில் படும்படியாக உருவாக்கி யிருக்கிருர். 3. மணிக்கொடி கதையின் நீளம் குறைவு, அழுத்தம் நேரானது. விகடனின் முத்திரைக் கதையோ அதற்கு மாருனது. மணிக்கொடி கதையில் கடைசிச் சில வரிகள் தேவையற்றவை. விகடன் கதையிலோ கடைசிச் சில பாராக்களே அனுவசியமானவை. மற்ற இயல்புகளை ஒப்புநோக்கும் பொறுப்பு, இலக்கிய அக்கறை நிரம்பிய வாசகர்களுடையது.]

மலடு

திண்டுக்கல் கே. ராமசாமி

நாராயணன் சரஸ்வதியுடன் குடும்பவாழ்க்கை நடத்த ஆரம்பித்த இவ்வைந்து வருஷங்களாக அவர்கள் வாழ்க்கை மலரும் மணமும்போல்தான் இருந்து வருகிறது.

ஆனுல் சரஸ்வதி வீட்டில் கால்வைத்த வேளை என்ன வேளையோ கோமளம்மாள் வயிற்றில் சுருக்கென்று தைத்தது. அவள் பெண் ஜானகி தனது கணவனுடன் நடத்திய வாழ்க்கையை முடித்துக்கொண்டு வீடுவந்து சேர்ந்தாள்.

நாராயணன் தங்கை ஜானகி விதவையாகி வீடுவந்ததும் சாதாரணமாக ஹிந்து குடும்பத்தில் நடக்கக் கூடிய சில்லறை மாறுதல்கள் எல்லாம் ஏற்பட ஆரம்பித்தன.

முக்கியமாக ஜானகிக்கு சரஸ்வதியும் தன் தமையனும் அவ்வளவு ஒற்றுமையாக இருப்பது பொறுக்கவில்லை. தாயும் பெண்ணும் ஒரு கட்சி, சரஸ்வதி எதிர்க்கட்சி. ஆனுல் நாராயணன் நடுநிலைமை வகித்து எல்லாவற்றையும் பொறுமையாக சகித்து வந்தான்.

சமயாசமயங்களில் நேரிடும் சச்சரவுகளை அவன் பொருட்படுத்தவில்லை. சரஸ்வதியைதனக்கு சரிசமானமாகவே எண்ணி வந்தானே அல்லாது அவள் தன் அடிமை—தனக்குள் கீழ்ப்பட்டவள் என்ற கொள்கையே அவனுக்குக் கிடையாது.

அவன் அன்பும் ஆதரவும் பெற்ற சரஸ்வதி தன் மாமி, நாத்தி கொடுமைகளையும், பேசும் பேச்சுக்களையும் சட்டைசெய்யவில்லை. அவள் தன் கணவனே தன் உயிர் என்று மதித்தாள். பர்த்தாவுக்கு ஏற்ற பதிவிரதை.

ஒரு நாள் மாலை நாராயணன் வெளியே உலாவப் போயிருந்தான். சரஸ்வதி சமையல் செய்து கொண்டிருந்தாள். கோமளம்மாளும் ஜானகியும் கூடத்தில் உட்கார்ந்திருந்தார்கள்.

எதிரே வெளி முற்றத்துக் கொடியில் வேஷ்டி உலரப் போடப்பட்டிருந்தது.

''அதோ பார், வேஷ்டி தோச்சுப் போட்டிருக்கிற அழகை, முட்டை முட்டையாக தேங்கறது பாசி. ஜலத்திலே நன்னு போட்டு அலசினுத் தானே என்னிக்கு தெரியறது இதெல்லாம்?'' என்று ஆரம்பித்தாள் ஜானகி.

''தெரியப்போறது! அஞ்சு வருஷமாக தெரிஞ்சுதே. இனிமேத் தெரியப்போறது, தொடைகாலி வீட்டுக்கு வந்த வேளை தரித்திரம் பிடுங்கி தின்னறது. அதுக்கேற்றுப்போல செய்யற வேலையும் அக்கழுக்கு இல்லாமே செய்யருளே?'' என்று அடுக்கினுள் மாமியார்.

''ஒண்ணுந்தான் தெரியல்லே, லோகத்தாருக்கு எடுபடவாவது கூடாதா? கொட்டுக்கட்டை இல்லாமபோனு அஞ்சு வருஷமாச்சே, ஒண்ணு காய்க்காதா, பூக்காதா? தானுவது சீர் படக்கூடாதா? என்று நீஷ்டூரத் தோரணையில் பேசினுள் ஜானகி.

இதைக் கேட்டுக்கொண்டே வந்தான் நாராயணன். அவன் மனசில் சுருக்கென்று ஜானகி கூறிய கடைசி வார்த்தைகள் தைத்தன. ஆனுல் ஒன்றும் சொல்லாமல் தன்னறையை நாடினுன்.

''உன் ஆம்படையாள் வேஷ்டி தோச்சு வெள்ளை வெளுக்கக் கொடியிலே போட்டிருக்கா கண்ணெப் பறிக்கறது பாக்கப் பாக்க'' என்று தாயார் மகனைத் தாக்கினுள்.

இந்த மாதிரி நாராயணன் எத்தனையோ சந்தர்ப்பங்களில் அகப்பட்டுத் தவித்ததுண்டு. ஒவ்வொரு முறையும் காதில் போட்டுக்கொள்ளாமல் வெளியேறிவிடுவான். அப்பொழுது தான் வெளியேயிருந்து வந்தவன், வந்ததும் வராதது மாய் யுத்தம் நடக்குமென்று எதிர்பார்க்கவில்லை.

கூட தனக்குக் குழந்தை பிறக்கவில்லையென்று தன் தாயாரும் தங்கையும் குறைப்படுவதுடன் நில்லாமல் அதற்காகவும் சேர்ந்து சரஸ்வதியை தூஷிப்பது அவன் நெஞ்சைக் கலக்கியது

மறுவினாடி துவாலையை உதறித் தோள்மேல் போட்டுக் கொண்டு வாசல் பக்கமாக நடந்தான்.

''இந்த மேட்டான மேட்டியைப் பத்திக் குத்தம் சொன்னா அந்த மஹாராஜனுக்கு மூக்குக்கு மேலே ரோஷம் வந்தூடறது' என்று சொல்லி முகத்தை ஒரு திருப்பு திருப்பிக்கொண்டாள் கோமளம்மாள்.

''யாருக்கென்ன நஷ்டம்?'' என்று உதட்டை பிதுக்கினாள் ஜானகி.

சமையலறையிலிருந்த சரஸ்வதி தன் மாமி நாத்திகளின் வார்த்தைகளுக்கு அர்த்தம் கற்பித்துக் கொள்ளவில்லை. தன்னைப் பற்றிக் கவலைப் படவில்லை. ஆனால் தன் கணவன் நிலைமைக்கு ரொம்ப அனுதாபப்பட்டாள்.

வீட்டை விட்டுப் புறப்பட்ட நாராயணனுக்கு மனசு நிம்மதியாகவேயில்லை. தனக்குக் குழந்தையில்லை என்ற எண்ணம் என்றுமில்லாமல் அவனுக்கு ஒரு சஞ்சலத்தையளித்தது. கால் போன வழியே போனான். அவன் நினைவு முழுதும் எங்கேயோ இருந்தது

''என்ன பாராமுகமாய்ப் போகிறாய்?' என்று ஒரு குரல் கேட்டது. நாராயணன் திரும்பிப் பார்த்தான்.

தன் வீட்டு வாசற் திண்ணையில் அவன் காலசாலை நண்பன் கந்தசாமி உட்கார்ந்திருந்தான். அவன் இரண்டு வயது குழந்தை குறட்டில் நின்று அவன் செருப்புகளை வைத்துக்கொண்டு விளையாடிக் கொண்டிருந்தது.

நாராயணன் அவனிடம் சென்றான்.

''இதோ மாமா வந்திருக்காரே மணி?'' என்று சொல்லிக் கந்தசாமி நாராயணனை வரவேற்றான்.

நாராயணன் திண்ணைமேல் உட்கார்ந்தான். அந்தக் குழந்தையை எத்தனையோ தடவை பார்த்திருக்கிறான். ஆனால் இந்த முறை அந்தக் குழந்தையைப் பார்த்த பார்வையில் ஒரு புதிய உணர்ச்சி தோன்றியது

மணி ''மாமா, மாமா'' என்று மழலைச் சொல்லில் கூவிக்கொண்டே தாவி நாராயணன் மடியில் உட்கார்ந்தான். நாராயணன் தன்னையுமறியாமல் ஒரு குழந்தைக்குத் தனது முதல் முத்தத்தையளித்தான்.

''டே, மழை பெய்யப் போகிறது. மணி, மாமா உன்னை முத்தமிட்டுவிட்டார்டா'' என்று கூச்சலிட்டுக் களிப்படைந்தான் கந்தசாமி.

நாராயணன் பெருமூச்செறிந்தான், அவன் கண்களில் நீர்ததும்பியது.

''கந்தசாமி, உன்னை அப்புறம் வந்து பார்க்கிறேன். மனசு என்னமோ போலிருக்கிறது'' என்று சொல்லி முடிக்குமுன் குழந்தையை மறுமுறையும் முத்தமிட்டு கீழே விட்டுவிட்டு மறு நிமிஷமே வெறிபிடித்தவன்போல் வேகமாக நடந்து மறைந்தான்.

கந்தசாமி ஒன்றும் தோன்றாமல் விழித்த வண்ணமிருந்தான். தன் நண்பன் மனமாற்றம் அவனுக்கு ரொம்ப ஆச்சரியமளித்தது.

அன்று முதல் நாராயணன் வாழ்க்கையில் வெளிப்படையானபலமாறுதல்கள்தென்பட்டன.

சுமார் ஆறு மாதம் கழிந்தது. தன் மனைவியிடம் அவனுக்கு ஒருவித வெறுப்பு ஏற்படத் தொடங்கியது. 'மலடி, மலடி' என்று தாயாரும் தங்கையும் கூடி அவளை ஒவ்வொரு வினாடியும் வசை கூறி வந்தது அவன் காதை துளைத்து ஹிருதயத்திலும் உறுத்தியது. உண்மையில் சரஸ்வதி மலடிதானோ என்று எண்ணி ஏக்கமடைந்தான்.

தன் வயது புருஷர்கள், தன் கலாசாலை நண்பர்கள் எல்லோரும் மக்கட்பேறு பெற்று இன்ப வாழ்கை நடத்தும்பொழுது தான் மாத்திரம் அந்த இன்பத்தை அடைய முடியாமலிருப்பது அவனை ரொம்பவும் துன்புறுத்தியது.

அவன் மாறுதலைக் கண்டுகொண்ட கோமளமும் ஜானகியும் அதுதான் சந்தர்ப்பமென்று மெல்ல மெல்ல முயன்று அவன் சரஸ்வதியிடம் கொண்டிருக்கும் அன்பையும் கலைக்க ஆரம்பித்தார்கள்.

நாளடைவில் மனைவியிடத்திலுள்ள இன்பம் புத்திரப்பேறினால் உண்டாகக் கூடிய இன்பத்திற்கு எந்த விதத்திலும் ஈடாகாது என்ற உறுதி உண்டாகிவிட்டது அவனுக்கு. அதற்குப் போதிய உதாரணங்கள் உதவினார்கள் ஜானகியும் கோமளம்மாளும்.

ஆதியிலிருந்தே சரஸ்வதியை வெறுத்து வந்த அவள் மாமியும் நாத்தியும் எப்படியேனும் நாராயணனுக்குத் தங்களிஷ்டப்படியே மறு கல்யாணம் செய்து வைத்து சரஸ்வதியை ஓட்டிவிட முடிவு கட்டிவிட்டார்கள். அவளது தற்போதைய நிலைமை அவர்களுக்கு ரொம்பஅனுகூலமாக இருந்தது. மெல்லத் தூண்டி வந்தார்கள் சமயம் வாய்த்தபோதெல்லாம்.

நாராயணன் தன் நண்பன் கந்தசாமியிடம் இதைப்பற்றி பிரஸ்தாபித்து அவன் யோசனையை கேட்டான். கந்தசாமி அந்த மாதிரி செய்வதற்கு முன் சரஸ்வதி ஒரு மலடிதானா என்பதை ஊர்ஜிதபடுத்திக் கொள்ள வேண்டுமென்று அபிப்பிராயப் பட்டான். நாராயணனுக்கு நண்பன் சொல்லியது நல்லதுதானென்று பட்டது.

அந்த ஊரில் ஒரே ஒரு 'லேடி' டாக்டர், ஒரே ஒரு ஜோஸியர். அந்த இருவரும் பணமுடையால் கஷ்டப்படுவது ஜானகிக்கும் கோமளத்துக்கும் ரொம்ப அனுகூலத்தையளித்தது.

எதற்கும் அஞ்சாத துணிவுடைய அந்த இரண்டு பேய்களும் லஞ்சம் கொடுத்து அவர்களை சரிப்படுத்திவிட்டார்கள்.

நாராயணன் தன் மனைவியை வைத்திய மூலமாயும், ஜாதக மூலமாயும் சோதிக்க விரும்பிய போது இரண்டும் சரஸ்வதிக்கு பாதகமாகவே விளைந்தது அதிசயமா?

கூட கோமளம்மாள் ஏற்பாட்டின்படி ஜோஸியர் நாராயணன் ஜாதகத்தைப் பார்த்து அவனுக்கு இரண்டு களத்திரங்களென்றும், அதில்

(234-ம் பக்கம் பார்க்க)

நாடு என் உயிர்

எஸ். வைதீஸ்வரன்

நாடு என் உயிர்
நாடு என் நிழல்
நாடு என் உடல்

பனிகமழ் கூந்தல்
திரு நதிச் சீலை
கடல் அணிபாதம்
என் தாயின் தனியழகு

பரந்த நிலம்
விரிமனதில் வேர்விட்ட ஞானம்
பேச்சிலோர் அமைதி, பிறழாததன்மை
என் தாயின் தனி இயல்பு

யுகம் யுகமாய் முகம் மலர
கபடமின்றி வரவேற்று
பொன் கொடுத்துக் கலை பகிர்ந்து
தாளிடாத மாளிகைக்குள்
புகலிடம் தந்த கரம்
என் தாயின் தனிப் பண்பு

அவள் வளர்ந்த ஜீவக் கதை
அவள் பெருக்கிய வேதப் புதல்வர்
அவள் தழுவிய மதங்கள்
அவள் ஆக்கிய கலைகள்
இத்தனையும் பொய்யாத புகழ்க்கதை
புகழ்க்கப்பாலும் வாழ்ந்த நிலை.
ஆனால்—

கலை, கணிதம், கலாச்சாரப்பணி
வேதம், சோதிடம், போத சன்மார்க்கம்,
கோபுரம், மந்திரம் கோர்த்துநின்ற மதங்கள்
யானை, அரசு, இடையிடைப்பூசல்கள்
மனம் வளர்த்த உழைப்பு,
உழைப்பு மீறிப் பொன் பொருள்
காலத்தை நீட்டிக், கருத்தை உள்ளிழுத்து
ஞானமே யாவும்,
அஹம் பிரும்மாஸ்மி.
தம்மம் சரணம் கச்சாமி
என்று மேளந்தட்டிப் பாடி
புறநோக்கு விலகிப் போச்சு.

முன்னூற்றுக்கு முன்
விஞ்ஞானம், லௌகீக வியாபாரம்
பொல்லாத் தொழில் நுட்பம், கள்ளமுகம்
யந்திரப்பூட்டம், தந்திரப் பேச்சு
என்றேதும் தெரியாத பாமரமாய்
களித்திருந்தோம் பிறவியினால்.

திரை கடலோடி திரவியம் தேடி
வந்தோரின் நிறப் பகட்டுக்கு
நாட்டை கைகழுவி, நெறியை பங்கிட்டு
நாமும் நிறம் மாறி
துரை வாழ்வில் வழுக்கி
விழுந்தோம் அடிமைப் புதையில்.
புதையிருளில் மோகமுற்று
மகுடி முன் பாம்பாகி
தாய் சொல் தாழ்வென்ற நினைப்பில்
வேடிக்கை யந்திரங்கள், மில் துணிகள்
குல்லாய்கள், காலுறைகள், நீளக்கைப் பழக்கங்கள்
நிரம்பி வழிந்து நிலத்தைக்குழப்பின.

இருந்தும்
நெறிகெட்ட புயல் மறைத்து
நிலையான விளக்கேற்ற
நரி, புலி விரட்டி நாமிங்கு கொடிகட்ட
புரிந்த தியாகம், தவம்,
வாழ் வெறிய குலம் கலங்க
சத்தியத் தீக்குளித்து
கீதை—ராட்டை கவசம் கட்டி
புறம் வெந்து பட்டும்
அகம் நொந்து போகாது
அகிம்சையாலே தாயை மீட்ட கதை
வீரக் கதையா—காந்தியின் கீதைக் கலையா ?
ஆனாலும்,

வெற்றியிலோர் மரு,
அன்னையின்
பனிகமழ் கூந்தலில்
ஒரு குடங்கை பிய்தல்
இழிமயிரது கருகிக்குமைந்து
தாயின் கூந்தலை பழிக்கலாச்சு
தாயின் தனிப் பண்பு சோதனைக்குள்ளாச்சு.

விஞ்ஞான நீர்தேக்கி, தொழிற் கப்பல் ஓட்டி
அகவாழ்வும், புறநோக்கும், சமவாழ்வும்
குடியரசால் ஆக்கிவரும் காலை
தேரை நிமிர்த்திவிட்டு தெருவுக்குள் இழுக்கும் வேளை
வடமுனை 'டிரா கன்' தீமூச்சுதற்ற
நெஞ்சு நீட்டி மண்காக்க காவுகொடுத்தோம் அன்று

இன்றோ திரண்டநிலவை விழுங்க வரும் பாம்பாய்
வடமேற்கு பாக் கபடமாய் ஊர்ந்துவர
காவு கொடுத்தலினும் காவு கொடுக்க வைத்தோம்

பாம்பு பின் ஊர சுவடு பற்றி
புற்று நோக்கிச் சென்றோம்.

நாடு என் உயிர்
நாடு என் நிழல்
நாடு என் உடல்
இன்று நாம் எழுப்பும் புதுக்குரல்கள்,
நேரில் காணும் நிஜ உணர்வுகள்.
காலத்தில் ஊற்றெடுத்த வீரமும்
வீரத்தில் சிந்தி விட்ட ரத்தமும்
வீணல்ல ; அதர்மம் மாய்க்க மண்ணில்
கண்ணன் நிகழ்த்திய காவியமும்
கால மலைப்புதரில் ஒடித்திரிந்து
உடலை இரும்பாக்கி
பெற்ற வீரப்போர் முறைகளும்
வெற்றிக்குத் துணையாச்சு.
இனி — ...

படைப்பாளி மனநிலை

தர்மூ சிவராமூ

எந்த கலைத்துறையைப் பற்றிப் பேசும் போதும் கலைஞனைப் பற்றிய பேச்சைத் தவிர்க்க முடியாது. அதுவும், மன வியல் பல்வேறு வகை களில் வளர்ந்து,கலைஞனே அத்துறையை சுவாதீன மாக தன் படைப்புகளுக்கு துணையாக்க முன் வந் துள்ள இன்று,படைப்புக்குப் பின் நிற்கும் படைப் பாளி முன்னைவிட முக்கியத்துவம் கூடியிருக்கிறான். எனவே படைப்பாளியைப்பற்றி சிருஷ்டிக்கும் மன நிலையைப்பற்றி (the creative state of mind) பேசாமல் படைப்புபற்றி சொல்பவை பூரண மாகாது.

மனவியல் பல்வேறு வகைகளில் வளர்ந்துள்ள துக்கு ஏற்ப, அத்துறையைப் பயன்படுத்தி இயங் கும் இலக்கிய விமர்சனமும் மனவியலின் வேறு வேறு வகைகளுடன் இணங்கி ஒரே படைப்பை பல வகைகளில் அணுக முடிகிறது. இந்த ஒவ் வொரு வகையும் விமர்சகனின், வாசகனின் மன இயல்புக்கு ஏற்றதாகத்தான் இருக்கும். தன் இயல்புக்கு ஏற்ற ஒரு வகையைத்தான் வாசிப்பவ னும் கைக்கொள்கிறான். எனவே படைப்பாளி யைப் பற்றி எழுதவரும் வாசகனும் தனது ஈடு பாடுகளை மனப்பண்பை வெளிக்காட்டிவிடுகிறான். ஆக, கலைத்துறையைப் பற்றிப் பேசும்போது படைப்பாளி பற்றின பேச்சும் முக்கியமாகிறது போல, விமர்சனத்தைப் பற்றிப் பேசும்போதும் வாசகனைப் பற்றிய பேச்சு நுழைகிறதாகிறது.

மனவியலில் 'பல்வேறு வகைகள்' என்றேன். அதுபற்றி சில வார்த்தைகள் சொல்லாமல் மேலே சொல்லப்பட்டவை தெளிவாகாது. இன்று மன வியல்காரர்கள் ஒவ்வொருவருமே தனித் தனிப் பாதையில் செல்லுமளவுக்கு அத்துறை வளர்ச்சி கண்டுள்ளது – அதுக்கு செல்வாக்கும் கவனிப்பும் அந்தளவுக்கு கிடைத்துள்ளது. அதன் நிலவரம் பற்றித்தான் இப்படிச் சொல்கிறேனேயன்றி, அதை பரிபூரணமாக அநுசரிக்கிறவனாக அல்ல. இங்கேயே நான் கூட ஒரு சின்ன வகையிலேனும் அதே துறையில் வேறு பாதை பிடிக்கிறதாகத் தான் 'அதை பரிபூரணமாக அநுசரிக்கிறவனாக அல்ல'எனும்போதுதொனிக்கிறேன். ஃபிராய்ட: ஜுங் 'பரிபூரணமாக அநுசரிக்காது கீழைத்தேச மனவியல் துறைகளில் தன் முடிவுகளுக்கு ஆதார மும் அவற்றுடன் ஒற்றுமையும் தேடியுள்ளார்.

இந்த பல்வேறு வகைகள் பற்றி ஃபிராய்:டிற் கும் ஜுங்கிற்கும் இடையே வேறுபாடுகளை பேசு வதால் ஏதும் சொல்லலாம். ஃபிராய்:ட் மனசின் வாழ்க்கைஉத்தேசம்பாலுணர்ச்சியை நோக்கியுள் ளது என்றார். ஜுங், அப்படியல்ல ஆன்ம ஈடேற் றத்தை நோக்கியுள்ளது என்றார். இது பொத்தம் பொதுவாக சொன்ன வித்யாசம்.

இந்த இருவரையும் படிக்கும் ஒருவன் தன் மனப் பண்புக்கு ஏற்ப வேறு ஒரு பார்வைதான் கொள்வான். பரிபூரணமாக இத்துறையில் ஒரே பார்வையை ஏற்பது அசாத்யமே. இதன் காரணம் இயற்கையின் விசித்திரத்தில்தான் இருக்கிறது என வேண்டும். ஒரே மரத்தின் ஒரே கிளையின் இரண்டு இலைகளிடையே உள்ள வித்தியாசத்தி லுள்ள அதே சிருஷ்டி விசித்திரம்தான் இங்கும், இரண்டு மனித மனங்களிடையிலும். இப்படி நான் சொல்வதே எனது மனப் பண்பை வெளிப் படுத்தி அந்த சிருஷ்டி விசித்திரத்திற்குள் நானும் வீழ்ந்துள்ளவனாகக் காண்பிக்கும்.

இங்கு மனவியலின் 'பல்வேறு வகை' பற்றி சொல்ல முயன்றிருக்கிறேன். இந்த வெளிக் கோட்டுருவை வைத்துக்கொண்டு பார்த்தால் தான் விமர்சகனின் காரியத்திலுள்ள கஷ்டமோ, அல்லது அபத்தமோ தெரியும். கஷ்டம் என் கிறேன்,ஏனென்றால், கலைப் படைப்புகள் யாவற் றுக்கும் ஒரு—ஒரே ஒரு—நிறுவையை யாவரும் உபயோகித்து அறியக் கூடியதாக வைத்துக் கொள்வதுக்காக. இதை ஒரு objective value என லாம். மனவியல் துறையில் நின்று பார்க்கையில், பல்வேறு வகையான மனப்பண்புகளுள்ள படைப் பாளிகள், பல்வேறு வகையான வாசகர்களி டையே ஒரு objective value உண்டாக்க முயல் வது அபத்தமாகவும் படுகிறது. இவ்விஷயம் மேல் நாடுகளில் அதிகம் பேசப்பட்டது என நம்பு கிறேன். பேசப்பட்டவை பற்றிய என் சொற்ப அறிவை நீக்கிக்கொண்டு பார்த்தால், அல்லது அந்த அறிவுடனேயே பார்த்தாலும் இவ்விஷயம் objective ஆக தீர்க்கக்கூடியது அல்ல—அதாவது நாலுபேர் மத்தியில் தீர்க்கக்கூடியது அல்ல. ஸப் ஜெக்டிவ் ஆக, தன்னுள்ளேயேதான் தீர்வு காண வேண்டும் என்று தோன்றுகிறது.—இவ்வகையாக எனக்குத் தோன்றுகிறதை சொல்வதிலேயே மீண் டும் என் மனப்பண்பை உங்களுக்கு வெளிக்காட்டு கிறவனாகிறேன்.

இதுதான் அடிப்படை சங்கடம். ஒவ்வொரு மனமும் வேறு வேறு அநுபவங்களால் ஆனது. ஆகவே ஒரே அநுபவம் இரு வேறு மனங்களுக்கு நேரும்போது அவை பிரதிபலிப்பவையும் வேறு வேறு தன்மையானதாகிறது. மௌனியின் உலகும் புதுமைப்பித்தன் உலகும் வித்யாசம் காட்டுகிறது இருக்க,இரண்டு வேறு வேறுவாசகர்களிலும் இந்த ஆசிரியர்கள் தனித் தனியே வேறு வேறு பிரதி பலிப்பையே தருகிறார்கள்.

இந்நிலையில் விமர்சகன் எதை வைத்து ஒரு படைப்பை நிறுப்பது?

இவ்விடத்தில் நான் முதலில் மேலாகத் தீண்

.ச் சொல்லிய ஒரு பிரயோகத்தைக் கொணர்)றேன் சிருஷ்டிக்கும் மனநிலே. (The creative tate of mind.)

ஹெமிங்வேக்கும் காஃப்காவுக்கும் எவ்வளவு பித்யாசம் இருந்தாலும் அவர்களது சிருஷ்டிக்கும் மனநிலே ஒரே வகையானதாகத்தான் இருக்கும். இந்த மனநிலேயின் தன்மையில் வித்யாசமில்லே. இது என் தியரி அல்ல. பிறர் இதுபற்றி ஏதும் சொல்லியுள்ளார்களோ தெரியாது. சுதாவாக யோசித்தும் சொந்த அநுபவங்களில் என் சின்ன வகைகளில் கவனித்தும் சொல்கிறேன். அதாவது வாசகனுக பிற ஆசிரியர்களே ரசித்து எழுதிய அனுபவத்தோடேயே கவிதைகள் என்றும் ஓவியங் கள் என்றும் சுயமாக முயன்ற அனுபவங்களும் எனக்கு கிடைத்திருப்பது இக்கட்டுரையில் நான் படைப்பாளி பற்றிச் சொல்கிற எதுக்கும் கொஞ்ச மாவது ஆதாரம் காட்டும்

படைக்கிறபோது, அல்லது மனித ஜீவன் ஒரு படைப்பாளியாக மாறும்போது அவனுக்கு நேர் கிற மாறுதலே அவன் படைப்பு காண்பிக்கிறது. மௌனி மன அசைவில் கண்டவற்றை சொல்ல வந்தாலும் புதுமைப்பித்தன் பிளாட்பாரத்தில் கண்டதைச் சொன்னுலும் அவர்கள் கண்டவகை யும், சொல்லுகையில் இருந்த மன நிலேயும் ஏறத் தாழ ஆளுக்கு ஆள் ஒத்து இருக்கிருர்கள். இந்த நிலேயைத்தான் படைப்பின் மூலம் . வாசகன் அடையவேணுமேயன்றி வேறெதையுமல்ல. இந்த நிலேயை அடைய உத்தேசித்த வாசிப்புத்தான் சுத்தமானதாகும்.

முன்னுல் குறிப்பிட்ட 'பல்வேறு வகை' அணுகுதல் இவ் அணுகுதலிலிருந்து எப்படி வித் யாசப்படுகிறது என்பதைச் சொல்லிவிடுகிறேன். அதன் பிறகு இந்த அணுகுதல் இந்த சிருஷ்டி மன நிலேபற்றி பேசலாம்.

ஜெயகாந்தன், சுந்தர ராமசாமியை ராமா மிர்தம், மௌனியோடு ஒப்பிட்டு பின்னவர்களிரு வரும் 'ஹம்பக்'காரர்கள் என்கிற வாசகர்கள் இருக்கிருர்கள். இங்கு வேருெரு சங்கடத்தை முதலில் தீர்த்துவிடுகிறேன். பின்னவர் இருவரை யும் 'புரிந்து'கொள்ளாமல் இப்படிச் சொல்கிருர் கள் என்ற பேச்சு வேண்டாம். அப்படிப் பேசுவது கண்யம் அல்ல. விமர்சன இங்கிதத்துக்குப் பொருந்தாது. 'அவர்கள் வகையில் புரிந்துகொண் டிருக்கிருர்கள்'' என வேண்டும். இந்நிலேமையை விளக்குவதன் மூலம் நம் 'பல்வேறு வகை' பற்றி பிரச்னேயைத் தீர்க்கலாம். சுந்தர ராமசாமி, ஜெயகாந்தன் இருவரையும் எடுத்தது ஏனென் ருல் இளேயவர்கள், புதியவர்கள், ராமாமிர்தம் மௌனி இருவரையும் கௌரவிப்பவர்கள் என் பதுக்காக. இவ்விரு புதியவர்களும் வெளிப்படை யாக பத்திரிகைகளில் கௌரவிக்காததைக் கொண்டு அவ்விஷயத்தை நிராகரித்தால், நாம் புதுமைப்பித்தனேயும் க. நா. சு.வையும் நம் புது எழுத்தாளர்களுக்குப் பதிலாக எடுக்கலாம். லா.ச.ரா. மௌனி உலகுகளேவிட அதிகம் தூலமான உலகுகள் பு.பி. க. நா. சு. இருவருடையதும். ஜெய காந்தன் சுந்தரராமசாமி போல்; மௌனியையும் லா.ச.ராவையும் கௌரவிக்கிருர்கள். மௌனியை ரசித்துப் பாராட்டும் புதுமைப்பித்தனின் எழுத் தைப் பாராட்டும் வாசகர்கள் பலர் மௌனியை 'ஹம்பக்' என்கிருர்கள். இதுதான் நிலே. இந் நிலே யில் 'மௌனி' புரிந்துகொள்ளப்படவில்லே என் பது தவறு. புரிந்துகொள்ளல் ஒருவகையில் அதா வது வேறு ஒருவகையில் அந்தவகை வாசகருக்கு நேர்ந்திருக்கலாம். இந்த வித்யாசம்—புரிந்து கொள்ளலுக்கும் ஏதோ ஒரு வகையில் புரிந்து கொள்ளலுக்கும் இடையேஉள்ள வித்யாசம்தான் இக்கட்டுரையின் நோக்கம். வாசகர் இவ் வித்யா சத்தை என்னுடன் தொடர்ந்து அணுக முயல வேண்டும்.

மௌனி புரிந்து கொள்ளப்படாதவர் என் ருல் உடனே ஒரு (Objective Value) உண்டா கிறது. அதாவது ஒரு சம நிறுவை, யாருக்கும் பொதுவான நிறுவை வருகிறது. இது, ஆசிரிய னின் உத்தேசத்தை படைப்பில் புரிந்துகொள் ளல் வேண்டும் என்ற அடிப்படையில். மனவியல் வளர்ச்சியில் இன்று,ஆசிரியனின் உத்தேசம் என்று அவனது பிரக்ஞை பூர்வமாக, அவனது உத்தேசம் பற்றிய அவனது கட்டுப்பாடுகளுள்தானு உண்டா கிறது என்பதே சந்தேகமாகும். அதாவது, மௌனியைப் போன்ற ஒருவரின் படைப்புக்கு ஒரு குறிப்பான திட்டவட்டமான உத்தேசம என்று இருக்கா மௌனியே அதை பிரக்ஞை பூர்வமாக வெளிக்காட்டி எழுதி இருக்கிருரா என் பதுதான். இன்றைய மனவியல், பிராய்டின் பின் 'உள் மனம்' என்கிற அபூர்வமான பெருவெளியில் உள்ள மர்மங்களுக்குள் இருந்து ஆசிரியனின் வெளிப் பிரக்ஞையை அவனே அறியாமல் அவனே ஆட்கொண்டு எழுத வைக்கும் மர்ம உத்தேசங் கள் இருக்கலாம் என்கிறது. மௌனி எவ்வகை உத்தேசத்துடன் எழுதினுலும், அவரது உண்மை வேறு வேறு வகை உத்தேசங்களுடன் அதே கதை யின் போக்கை நிதானித்து இருக்கலாம். எனவே தான் ஒரு கதைக்கு அதுவும் மௌனி போன்றவர் கதைக்கு பிரக்ஞை பூர்வமான ஒரு தளம் இல்லே ஏன் மௌனிக்கே இன்று அவரது அன்றைய 'மாறு தல்' கதை வேறு வேறு செய்திகளைச் சொல்லக் கூடும்.—நெருங்கிய நண்பர்கள், மூத்த மகன் போன்ற இருதயத் தொடர்புகளே சமீபத்தில் திடீர் திடீரென இழந்து மனப் பின்னணி பாதிக் கப்பட்டு இருக்கும் அவருக்குச் சொல்வதுக் கென்று அவரது உள்மனம் ஏற்கெனவே தந்த சமிக்ஞைகள் எதையும் 'மாறுதல்' போன்ற அவரது வாலிப கால எழுத்துக்கள் சொல்லியிருக்கலாம். அவருக்கே எட்டாத மர்மங்களாக, அகழ்ந்து செல்லும் மனப் பண்புக்கு ஏற்ப ஈடுகட்டுவதா கவே அவரது கதைகள் இருக்கலாம். ஆகவே இது தான் புரிந்து கொள்வதுக்காக இக்கதையில் இருக் கிறது என்று ஒரு கதைப்பற்றிச் சொல்வதுதவறு- இன்றைய மனவியல்துறை செல்வாக்கின் கீழ்.

ஆக பு.பி., க. நா. சு.—ஜெயகாந்தன், சுந்தர ராமசாமி ரசிகர்கள் மௌனியைப்புரிந்துகொள்ள வில்லை என்று 'புரிந்து கொண்ட' நாம் மூக்கை நிமிர்த்துவது தவறு. நாம் புரிந்துகொண்ட வகையில் அவர்கள் புரிந்து கொள்ளவில்லை, என்பதே சரி.இப்படி அந்த ரசிகர்களுக்கும் நமக்குமிடையே ஒரு புதுவகை வித்யாசத்தை நாம் ஏற்றுக் கொள்கையில் இலக்கிய உலகில் மௌனியின்நிலை என்ன என்பது புதிராகிறது—அதாவது அந்த ரசிகர்கள் மௌனியை ஹம்பக் என்பதும் நாம் மௌனியை நமது தலைமுறையின் பெரிய எழுத்தாளன் என்று கொள்வதும் ஆன இரண்டு பார்வைகளில் எப் பார்வை ஸ்டான்டர்:டானது? அதாவது எந்த வகையில் புரிந்துகொள்ளல் சரி?

இங்கு எந்த வகையில் புரிந்து கொள்ளல் சரி என்ற கேள்வி அபத்தமானது. சரியானவகையில் புரிந்து கொள்ளல் என்றால், இந்த உத்தேசம் இருக்கு இது புரிந்துகொள்ளப்படவேணும் என்ற பழைய நிலை பிறக்கும். இதுதான் புரிந்துகொள்ள இருக்கு என்பது தவறு. ஆகவே சரியான வகை புரிந்துகொள்ளல் என்று இல்லை. இந்நிலையில் மௌனியின் இலக்கிய நிலைமையை, அவரிடம் புரிந்துகொள்ளப்படுவதுக்கு உள்ள எந்த மர்மத்தையும் கொண்டு நிதானிக்க முடியாது என்ற முடிவு வருகிறதல்லவா?

இந்த வகைச் சிக்கல் புதுமைப்பித்தனைப் பொறுத்து இல்லை. புரிந்துகொள்ளல், புரிந்து கொள்ளாமை சங்கடம் அவரிடம் இல்லை. எனவே அவரை எதைக்கொண்டு இலக்கிய பீடத்துக்கு கொணர்கிறோமோ அதையேதான் மௌனியிடமும் காண முயலவேண்டும். இப் பொது அம்சம் தான் சிருஷ்டிக்கும் கணத்தில் ஆசிரியன் கொள்ளும் மனநிலை.

சுத்தமான வாசிப்பு அந்த சிருஷ்டி மன நிலையை ஒரு படைப்பில் வாசகன் உணர்கிற காலங்களில்தான். ஆசிரியனிடம் பிறந்து படைப்பில் வெளிப்பட்டு வாசகனிடத்தில் தொற்றும் இந்த சிருஷ்டி மனநிலை எல்லா காலங்களிலும் விமர்சகர்களை ஏமாற்றி வந்துள்ளது—இன்றும் ஏமாற்றிக் கொண்டிருக்கிறது. அதாவது விமர்சகர்கள் இதை ஒரு சம நிறுவையாக்க முயல்கிறார்கள்—ஒரு 'அ:ப்ஜெக்ட்டிவ் வால்யு' ஆக்கப் பார்க்கிறார்கள். சில திட்டவட்டங்களை வகுக்கிறார்கள். ஆனால் ஒரு புதிய படைப்பாளி பிறந்து புரட்சி செய்யும்போது, அந்தத் திட்டவட்டங்களையும் மீறினதாக இவனுடைய படைப்பு வந்துவிடுகிறது. எலியட்டின் படைப்பை ஹெமிங்வேயின் ஆங்கில நடையை, அப்ஸ்ட்ராக்ட் ஓவியர்களைப் பற்றி எழுந்த பிரச்னையும் திட்டவட்டங்களைப் பொறுத்ததுதான்-சம நிறுவையைப் பொறுத்தது தான். ஆனால் பழைய திட்டவட்டங்கள் தளர்த்தப்பட்டு மீண்டும் வாசகர்கள் விழிப்படையும் போதுதான், அவனவன், தன் தன் சுவாதீனத்தில் ரசிப்பது என்ற காரியம் நிகழ்கிறது. அப்ஜக்டிவ் ஆன சம நிறுவைகள் சுவாதீனமான வாசக விழிப்பின் பொறுப்பை எதிர்பார்ப்பதில்லை. வாசகன் பொறுப்பு ஏற்கவேண்டிய கணங்கள் புரட்சிப் படைப்பாளியின் காலத்தில்தான் நேரும். ஒவ்வொரு காலத்திலுமே கலைஞன் வாசகனின் தனிப் பொறுப்பை எதிர்பார்த்துத்தான் புதுப் பாதை போட்டிருக்கிறான்.

புதுக்கவிதைக்காரர்களும் இவ்வகையாகத் தான் இன்று தமிழ் வாசகனின் பொறுப்பை எதிர்பார்க்கிறார்கள்.

விமர்சனமும் படைப்பைப் போலத்தான். படைப்பாளி சிருஷ்டி மன நிலையை தன் படைப்புக்குள் கொண்டுவந்துவிட முயன்று ஏதோ அரை குறையாக நிறைவேற்றுகிறான். விமர்சகனும் படைப்பில் கிடக்கும் அந்த அரைகுறையை வாசகனுக்குச் சுட்டிக் காட்ட முயன்று அபூர்ணமாகவே நிறுத்திவிடுகிறான். படைப்பாளி இடையறாது செய்யும் பரிசோதனைகளுக்கு எதிரொலித்த படியே விமர்சகனும் தன் 'அப்ஜெக்டிவ் வால்யுக்களை பொது அளவுகோல்களை மாற்றி மாற்றிக் கொண்டிருப்பான். ஆகர்ஷணச் சுருக்கில் மாட்டிக் கொண்டாலும் தன்னுடன் ஒன்றுமோதி நெருங்கி விடாமல் ஆனால் ஒன்றைவிட்டு ஒன்று நீங்காமலும் சுற்றிவரும் கிரகங்கள் மாதிரிதான் படைப்பும் விமர்சனமும் இவையும் இயற்கையின் நியதிகளுக்கு உட்பட்டவை போலும்.

'இதெல்லாம் அழகாய்த்தான் இருக்கிறது—அந்த சிருஷ்டி மனநிலை, என்றால் என்ன?' என்று கேட்கிறீர்கள். அதை இதுதான் என்று சுட்ட முயல்வதே ஒரு 'அப்ஜக்டிவ் அப்ரோச்' அல்லவா? நான் சாமர்த்தியமாக தப்பிக்க இயலவில்லை. உங்கள் தனித்த வாசகப் பொறுப்பை எதிர்பார்த்து சொல்கிறேன். நீங்கள் அப்பொறுப்பு உள்ளவரானால் இளங்கோவின் கவிதையில் ஒரு மர்ம அநுபவம்—அதாவது இன்ப அநுபவம்' கவி அநுபவம்' என்ற லேபல்களை மீறி—எழுவது போலவே ஒரு புதுக் கவிதையிலும் ஏற்பட முடியும். நாகரிக மாறுபாட்டால், சரித்திரப் புழுதியால், எதாலும் தீண்ட முடியாத படைப்பாளியின் அம் மன நிலையை அணுகுபவர்களுக்கு சொல்லவேண்டாம்—அறிவார்கள்.

பாரதப் போர்

பொய்ப்புழுதி கிளப்பி பாவக்குருதி சிந்தி
தன்வினை தின்னும் பகைக் கூத்து
தாய் மடி அறுக்கும் தறுதலை ஆட்டம்
சரித்திர சாபத்தின் அந்திமப் புலம்பல்
உடமை மறுத்தது பழங்கதை பிறப்பு
உரிமை பறிப்பது புதுக்காவிய வித்து
நாமே பாண்டவர் பண்டு ஆண்டவர்
அவரோ கவரவர் கவரும் பண்பினர்
சூதை வளர்க்கும் சகுனிச் சீனன்
கீதை உரைக்கும் சாரதித் துங்கு
தூது பொய்த்திடும் தீயோர் மன்றம்
களமோ பெரிது காணும் உலகே
குருக்ஷேத்திரம்.

—சு. சங்கரசுப்ரமண்யன்

சிறுகதை

எதிர்ப்பு

சி. சு. செல்லப்பா

'இவன் தான் நிழலோடேயே போராட
புறப்பட்டுட்டானே சுதந்திரத்தை மடி
யிலே வச்சுக்கிட்டு—'

மைதானத்து ஒலி பெருக்கியிலே பாரதியின் அச்சமில்லை' பாட்டை ஒரு உணர்ச்சித் தீவிரக் குரல் பாடிக்கொண்டிருந்தது. பாகிஸ்தான் ஆக்ரமிப்புக் கண்டன அவசரப் பொதுக்கூட்டம். ஊரில் எங்கும் கையில் பத்திரிகையுடன் அதே பேச்சு. அதைவிட அவர்களுக்குப் பரபரப்பான ஊர்ச் செய்தியையும் சேர்ந்துகொண்டிருந்த கூட்டம் அலசிக்கொண்டிருந்தது.

'நம்ம சுந்தரலிங்க முதலியாரா இப்படி...?'

'அட, மனுஷனுக்கு கட்சி பிடிக்கல்லேன்னு விலகிக்கிடட்டும். வீட்டோடு குந்திக்கிட்டு இருக்கிறது!'

'நேற்றுவரை அடி நாக்கு கசக்கப் பேசின எதிர்க்கட்சியிலேயா போய் சரணாகதி?'

'தூண்டிமுள் முனை ஆகாரத்துக்கு நப்பாசைப்படாத மீனு எங்கேயானும் உண்டா?,

'முதலியாரைப் பற்றி அப்படி ஒரே முட்டாச் சொல்லிட முடியாது. மனிசன் மனசுக்குள்ளே ஆயிரம்...'

'அட, ஆயிரம் குடஞ்சுக்கிட்டு இருக்கட்டுமே. பொது வாழ்விலே இப்படி துரோகம்..'

'அதுக்குள்ளே முடிவு கட்டிட்டா; பாப்பமே.'

இந்த ரீதியில் ஒரு பேச்சுப் போக்கு. இன்னொரு போக்கு—

'என்ன, சுந்தரலிங்க முதலியாரா அவுங்க கட்சியிலே போய் சேர்ந்துக்கிட்டார்! நம்ப...'

'நம்பித்தான் ஆகணும். விண்ணப்பத்தாள் வாங்கியாரச் சொல்லி விடியற்காலையிலே சேர்ந்துட்டார்.'

'அவங்களுக்கு கையொடிந்த மாதிரி.'

'இவங்களுக்கு மூன்றாவது கை வந்த மாதிரியா?'

'மனிசன் உள் நோக்கம் எதுவும் இல்லாமெ செய்திருக்க மாட்டாரு.'

'உள்நோக்கம், வருகிற தேர்தல்...'

'அது கிடக்குது எம்மாந்தூரம்?'

'நீ ஒண்ணு. சமுத்திரத்திலே பெருங்காயம் கரைச்சமாதிரி. வாசனை அதிலே எடுக்காது. ஆயிரத்துக்குக் கீழே ஒண்ணு, அவ்வளவுதான்.'

'ஒரு இடத்திலே தலையாக இருந்தால் போகிற இடத்திலேயும் தலையாக ஆயிட முடியாது!'

'அதை எப்படிச் சொல்ல? இப்போ கழுத்துக்கு மேலே உட்கார்ந்து இருக்கிறவங்க எத்தனை பேரு தலைக்குத் தலை தாவினவங்க. முதலியாரும் தலையானால் பத்தோடு பதினொன்று.'

ஊர்ப்பேச்சை வாயடைக்க முடியாது. சுந்தரலிங்க முதலியாரும் அதை எதிர்பார்த்தவர் இல்லை. ஊரிலேயே பெரிய மனிதரான அவருக்கு பொது வாழ்வு கை நகத்தோடே பிறந்த மாதிரி. வளர்கிற நகத்தைத்தான் வெட்டுகிறோமே தவிர அடி நகத்தை பெயர்த்து எடுக்கிறதில்லை. பொது வாழ்வை அவர் அறுத்துக் கொள்ள விரும்பவில்லை. வளர்ந்த நகம் மாதிரி கட்சி உறவைத்தான் துண்டித்துக் கொண்டார். அவர் விவேகம் ஊருக்குத் தெரியும். ஊர் மண் அவருக்குப் புரியும். தன் மட்டுக்கு சிந்தித்து சரியான முடிவுக்கு வந்துவிட்டதாக அவருக்கு நிச்சயம். ஊர் எதையும் பேசிக்கட்டும், தடுக்க நாம் யாரு. இப்போது என்னை தடுக்க முடிந்ததா? பொது வாழ்விலே நாலும் தான்...

அவர் வீட்டுக்குப் பக்கத்துலே இருந்த மைதானத்து மைக் தாள் 'அச்சமில்லை'யை அவர் காதில் அறைந்துகொண்டிருந்தது. அதை கேட்டுக் கொண்டே காலையில் நடந்ததை எல்லாம் அவர் மனசு துருவிக்கொண்டிருந்தது.

தான் செய்த முடிவை அவர்தன் கட்சிக்காரர்கள் கிட்டே கூட மூச்சு விடவில்லை. ஆர்ப்பாட்டமாக எதிர்க்கட்சிக்காரர்களுக்கு தெரியப்படுத்தி நாள் குறித்து விழா நடத்தி மேள தாளத்தோடேயும் போய்ச் சேரவில்லை. அவர் இதை காலையிலே எழுந்ததும் செய்த ஒரு மணி நேரத்திலே ஊர் காற்றே இதைத்தான் பரப்பிக்கொண்டிருந்தது. அதைக் கேட்டுத்தான் அவர் கட்சியாளர்களே பதறி வந்து கேட்டார்கள்.

'காலமே முதல் ஊர்லே புரள்கிற சேதி நிசமாக இருக்குங்களா?'

'தீ இல்லாமல் புகை கிளம்பரது உண்டுமா?' சிரித்துக்கொண்டு கேட்டார் சுந்தரலிங்க முதலியார். வந்தவர்களுக்கு இது முடிந்துபோன விஷயம் என்று அப்போதுதான் தெளிவாயிற்று. நெஞ்சை திடப்பத்திக்க கொஞ்சம் நேரம் ஆச்சு. பிறகு கேட்டார்கள்:

'இந்த முடிவுக்கு நீங்க வருவீங்கன்னு...'

'ஆமாம், நேற்று இரவு வெகுநேரம் வரைக்கும் எனக்கே தெரியாதே. மனுசனுக்கு திடீர்னு ஞானோதயம் வந்துட்டது என்று வைத்துக்கொள்ளுங்களேன்.' சொல்லிவிட்டு மறுபடியும் சிரித்தார்

'இல்லை...'

'இல்லே என்ன, இருக்கு என்றே வைத்துக் கொள்ளுங்கள். இருபத்தி நாலு மணி நேரத்துக்குள்ளே உலகத்தை எத்தனே தடவை சுற்றி வருகிறான் மனிதன். இப்போது. நான் இந்த சின்ன முடிவுக்கு வர யுகத்தையா தாண்டி வரணும்?'

சுந்தரலிங்கம் இந்த ரீதியில் பேசினது அவர்களுக்கு எட்டாக்கையாக இருந்தது. 'உங்களுக்கு கொஞ்சம் விளக்கிப் பேசினுத்தான் புரியும் இல்லேயா' என்று ஆரம்பித்தார்.

'காலே விழித்ததும் விழிக்காததுமாக ரேடியோ முகத்திலே விழிக்கிறதுதான் என்வழக்கம்னு உங்களுக்குத் தெரியும். நம்ம ஊருக்கு பேப்பர் எட்டு ஒன்பது மணிக்கு மேலேதானே வருது. நேற்று காலே ரேடியோவும் பின்னுடி பார்த்த பேப்பரும்தான் என்னே இந்த முடிவுக்கு விரட்டினது என்முல் உங்களுக்கு திகைப்பாக இருக்கும் நீங்கள், என்னெல்லாமோ நினேச்சுக்கிட்டுப் போயிரக் கூடாதே என்கிறதுக்காகத்தான் நான் சுத்தமாக பேசிட விரும்புகிறேன். பாகிஸ்தான் படைகள் பீரங்கியை சுட்டுக்கிட்டு நம்ப மண்ணுக்குள்ளே வந்துக்கிட்டு இருக்கு, நம்ம படைகள் எதிர்த்து தாக்குகின்றன இதுதான் செய்தி. எதிரிப்படை அங்குலம் அங்குலமா முன் நகர்கிறதை என் கண்ணுலே பார்க்கிறமாதிரி பிரமை. பேப்பரை விவரமாக படித்துவிட்டு கீழே போட்டேன். குறுக்கும் நெடுக்குமா நடந்தேன். நான் எதிர்க்கட்சிக் காரன்—எதிரிக்கட்சிக்காரன், இப்படி சொல்லிக் கொண்டேன். நீங்கள் என்னே வந்து கேட்கிறதிலுலே சொல்கிறேன், இல்லாவிட்டால் என் பைத்தியக்கார யோசனேகளே எனக்குள்ளேயே வைத்துக் கொண்டிருப்பேன். இப்போது சொன்னுல் நீங்கள் சிரித்தாலும் எனக்கு அக்கறை இல்லே. இப்போது நான் யாருக்கு எதிரி எதுக்கு எதிர்க்கட்சி என்று கேட்டுக் கொண்டேன். இத்தனேநாள் நீங்களும் இன்று காலேவரை உங்களில் ஒருவனுக இருந்த நானும் எதை எதிர்த்து வந்திருக்கிறோம், எதுக்காக எதிர்த்து வந்திருக்கிறோம். என்கிறதெல்லாம் தெரிந்த விஷயம். திருப்பிச் சொல்லிக்க வேண்டாம். நேற்று காலேயிலே இருந்து எனக்கு குழப்பம். நமக்கு எதிரி யாரு, எதிர்க்க வேண்டிய விஷயம் எது என்று.

பாகிஸ்தானே எதிர்க்க இரண்டு போர் முனேகள் வடமேற்கேயும், கிழக்கேயும். சீனுக்காரனே இமயமலே நெட்டுக்கும் போர் முனேயை நட்டுவச்சிருக்கான்—மூன்று வருஷமாக. எரிகிற வீட்டிலே பிடுங்கினது ஆதாயம் என்கிற புத்திக்காரன். இப்போது என்ன செய்யப்போகிருனே. இரண்டு ஆடுகள் முட்டிக்கிறபோது வருகிற ரத்தத்தை நக்கிக் குடிக்கிற நரியாக எதாவது செய்யலாம். அந்த நரியின் கதி பின்னுடி அவனுக்கு ஏற்படுகிறது இருக்கட்டும். இப்போதைக்கு அவன் எத்தனே போர் முனேயை கிளப்பப் போகிருனே?

இதெல்லாம் ஏன் சொல்கிறேன் இப்போ? எனக்கு இப்போது எத்தனே போர்முனே என்று கேட்டுக்கொண்டேன். எந்த முனேக்கு நேரே இருக்கேன். எதை ஜயிக்க என்றும் கேட்டுக் கொண்டேன், மேலே சொன்ன போர் முனேகளே நான் சொல்லவில்லே அதுக்கெல்லாம் போக எனக்கு வயசாச்சு, என் மகன் போயிருக்கிறுன். உங்களுக்குத் தெரியும். இப்போது போய்ச்சேர்ந்தவன் இல்லே அவன். ஏழெட்டு வருஷமாச்சு. இந்த நிமிஷம் அவன் எங்கே எதுக்கு நேரே நிற்கிருனே தெரியாது. அது ஒரு பக்கம் இருக்கட்டும். அவனேப்பற்றி சொல்ல வரவில்லேயே நான்.

கேள்வி கேட்டுக்க கேட்டுக்க மேலே மேலே குழப்பம். நான் உண்மையை சொல்ரேன் எல்லாருக்கும் தெளிவிலேதான். ஒரு தீர்மானம் பிறக்கும் எனக்கு குழப்பத்திலேதான் ஒரு முடிவு தெரிந்தது என்முல் உங்களுக்கு ஆச்சர்யமாகஇருக்கும். ஆமாம், குழம்பிக்கிட்டே இருந்தால்? இதை செய்துடுவோம்என்றுதீர்மானத்துக்குவந்துசெய்த காரியம்தான். எதிர்ப்பு என்பதுக்கு உண்மையான அர்த்தம் என்ன. எதிர்க்க வேண்டியது எதெது? நிதானிக்க முடியவில்லே நான், நாம் இதுவரைக்கும் எதிர்த்துக்கிட்டு இருக்கிறதெல்லாம்? நிசமாக எதிர்க்க வேண்டிய விஷயங்கள்தானு, இத்தனே நாள் எதிர்த்து ..நேற்றைக்கு கேட்ட கர்லேச்செய்திக்கு முன்னுலே இதெல்லாம் நேற்று கேட்ட செய்தி தான் எதிர்ப்பு என்கிறது, எதிர்ப்புக்கு இதுவரை நான் நினேத்திருந்ததைவிட சத்தான அர்த்தம் உண்டு, லட்சியமும் உண்டு என்கிறது பட்டது...' அந்த நினேப்பிலேதான் எதிர்க்கிறது என்கிறதுலேயே அடி நாக்கிலே இருந்து ஒரு கசப்பு ஏற்பட்டது எனக்கு. என் பகுத்தறிவாலே கூட அதை தடுக்க முடியவில்லே. அவ்வளவு தாக்கு வேகம். புராணத்துலே யார் பலமோ திடீரென அப்படியே போய்விட்டமாதிரி கதை சொல்வாங்களே, அதுமாதிரி. எனக்குத்தான் புராணங்களே மறந்து போச்சே, என் எதிர்ப்பு சக்தி திடீரென கழன்று விழுந்தமாதிரி விலகிவிட்டது. அந்த நினேப்பே அவிஞ்சு சாம்பல் பூத்துப் போச்சு. இனி புகைக்காத இந்த கரித்துண்டு உங்களுக்கு வெளிச்சம் காட்ட முடியாது அதனுலே...'

'இருந்தாலும்...'

'இப்படி எதிர்க்கட்சியிலே போய் சேர்ந்து விட்டீர்களே என்றுதானே கேட்கப்போகிறீர்கள்? கேட்காவிட்டாலும் மனசுக்குள்ளே இருக்குமே. அதுக்கும் பதில் சொல்லிவிடுகிறேன், நான் கட்சிவிட்டு கட்சி மாறவில்லே. எதிர்ப்புக்கு அர்த்தம் இல்லே என்கிறமாதிரி கட்சிக்கும் அர்த்தமில்லே, என்கிறதுதான் என் முடிவு. கட்சியாக நினேத்து அதுலே சேரவில்லே. அந்த போக்கிலேயும் நான் அதுலே செயல்படமாட்டேன். நீங்க பார்க்கப் போறீங்க.'

படபடென சொல்லி முடிக்கவில்லே முதலியார். அமைதியாக பேசி நிறுத்தினுர். பாதி பாரம் குறைந்தமாதிரி இருந்தது அவருக்கு பேசி முடித்ததும். வந்தவர்களுக்கு மேலே கேள்வி கேட்கத் தோன்றவில்லே. அவர்களுக்கு குழப்பமே கிடையாது, தெளிவாக இருந்தவர்கள். கட்சி—அது அவர்களுக்குத் தெளிவு; எதிர்ப்பு அவர்களுக்கு

மூச்சு போகிறபோது, 'மகன் போர்முனையிலே இருக்கிறான்லே 'மனுஷன் பதறிட்டாரு' என்று சொல்லிக்கொண்டு போயிருக்கலாம், ஒன்றுக்கு கேட்ட பெயரைக் கொடுத்து தள்ளிவிடுகிறது தானே லேசான காரியம்.

அவர்கள் போனபிறகு இவர்கள் வந்தார்கள். சுந்தரலிங்கமும் அவர்களை எதிர்பார்த்தே இருந்தார், அவர்கள் நுழையும்போதே என்ன, பூரண கும்பத்துடன் வந்திருக்கிறீர்களா என்று கேட்க வாயெடுத்தவர், 'சீ இன்னுமா, எதிர்ப்பு உணர்ச்சி' என்று சொல்லிக்கொண்டு, உதட்டு வார்த்தையை மென்று விழுங்கிவிட்டார். ஆனால் உங்களை எதிர்பார்த்தேன். அவர்கள் இப்போது தான் வந்து போனார்கள்' என்றார் புன்னகையுடன்.

'இல்லே, நீங்கள் இந்த முடிவுக்கு வந்ததை நாங்கள்...'

'நிச்சயமாக வரவேற்கத்தான் செய்வீர்கள், சந்தேகம் என்ன?' முதலியார் வாக்கியத்தை பூர்த்தி செய்தார்.

வந்தவர்கள் அசடு வழிய சிரித்துக் கொண்டார்கள். இன்று சாயந்திரம் பாகிஸ்தான் ஆக்ரமிப்புக் கண்டன அவசரக்கூட்டம் நம்ம மைதானத்திலே ..'

'ஆமாம் காலையிலே வீடு வீடாக நோட்டீஸ் கொடுத்துக்கிட்டுப் போனாங்க.'

'அதோடு ..'

'ஏன், என் ஞானஸ்நானத்தையும் ஊர றிய அம்பலப்படுத்துகிறதையும் இந்த கூட்டத்திலே சேர்ந்துக்கவா?' வெடுக்கென கேட்டார் சுந்தரலிங்க முதலியார்.

'இல்லே...' என்று இழுத்தார் ஒருவர்.

'இல்லே என்ன, இருக்கு என்றே வைத்துக் கொள்ளுங்கள். புத்தனுக்கு போதி மரத்தடியில் ஞானம் வந்த மாதிரி எனக்கும் நேற்று ரேடியோ செய்தி கேட்டதும் வந்து, உங்களில் ஒருவனாக நான் ஆனதை நீங்கள் ஊருக்கு சுட்டிக்காட்ட விரும்புவதில் என்ன தப்பு?'

முதலியார் இப்படி ஆரம்பித்தது அவர்களுக்கு கொஞ்சம் சங்கடமாக இருந்தது. அன்றய கூட்டத்துக்கு அவரையே தலைமை வகிக்கச் செய்ய திட்டம் போட்டு வந்தவர்கள்.

'விளக்கி வேண்டுமானால் சொல்கிறேன். அவர்களிடம் சொல்லாததை உங்களிடம்சொல்கிறேன். என் முடிவு நீங்கள் நினைக்கிறபடி ஞானோதய முடிவு இல்லே, பிராயச்சித்த முடிவும் இல்லே. நீங்கள் அப்படி ஏதோ ஒன்று என்று நினைத்தே என்னைப் பாராட்டி கூட்டத்துக்கு வரச் சொல்லி 'இவன்தான்' என்று ஊருக்கு வேடிக்கை காட்ட நினைக்கிறீர்கள். வெற்றி என்று எதையோ முடிவு கட்டி அவலை நினைத்து உரலை இடிக்க விரும்புகிறீர்கள். வெற்றி தோல்வியைப் பற்றிய நினைப்பு எனக்கு நீங்கள் நினைக்கிறபடி இருந்தால் அல்லவா உங்களுக்கும் அந்த வாய்ப்பைத் தர எனக்கு மனசு இருக்கும். பாகிஸ்தான் படைகள் நம்மை சுட்டுக்கிட்டு முந்தாநாள் இரவுலே இருந்து அங்குலம் அங்குலமா முன்னேறுவது சம்பந்தமான வெற்றி தோல்வியை நினைத்துத்தான் என் எதிர்ப்பு சக்தியே கீழே உதறிவிட்டேன். நான் உதறிவிட்டேனு, அதுகூட சரியில்லே, அவர்களுக்கு சொன்னதையும் உங்களுக்கு சொல்கிறேன். அதுவாக நழுவி விழுந்துவிட்டது. நேற்றுவரைக்கும் எதிர்க்க ஏதேதோ இருக்கு என்று தீர்மானமாக முடிவு கட்டி இருந்தேன். நேற்றுலே இருந்து எதிர்க்க, எதிர்த்துக்க என்ன இருக்கு என்று பார்த்தேன். எதுவுமே இருப்பதாக எனக்கு — எனக்கு, மட்டும் இல்லே — ஏன் உங்களுக்கும்தான் இருப்பதாக படவில்லே...'

'பாகிஸ்தானை...' என்று ஒரு குரல் எழுந்தது.

'நீங்க அதை காட்டுவீங்க என்று தெரியும். பாகிஸ்தானை எதிர்க்கிறது என்கிறது அர்த்தம் இல்லாத சொல் பிரயோகம். திருடனை விரட்டுகிறது, பிடிக்கிறது இதுதான் சரியான சொல். பாகிஸ்தானை எதிர்க்கிற வேலே இல்லே. விரட்டுகிற வேலே. பிடிக்கிற வேலே கூட அவசியத்தைப் பொருத்தது. வெள்ளைக்காரனை எதிர்க்கவா செய்தோம் — அட, நான் இல்லே, மற்றவங்க — செய்தோம்னு சொல்லிக்கிட உரிமை கிடையாது எனக்கு. விரட்டித்தானே ஆச்சு. அதனாலேதான் எதிர்ப்பு என்கிற வார்த்தையை நான் அப்படி வெறுக்கிறேன் — எவ்வளவுக்கெவ்வளவு அதில் ஆசையும், நம்பிக்கையும் வைத்திருந்தேனே அவ்வளவு.

அதனாலேதான் என் எதிர்ப்பு சக்தி ஓய்ந்துவிட்டதுக்காக பெருமைப்பட்டு, இல்லே நான் கைவிட்டதுக்காக நன்றி தெரிவித்து, உங்களைப் பாராட்டிக் கொள்ள விரும்புகிற கூட்டத்திலே கலந்துக்க நான் விரும்பவில்லே. நான் உங்களோடு சேர்ந்துவிட்டதை வெற்றி கொண்டாட இது என்று நீங்கள் நினைத்துக்கொள்ளக்கூடும். உங்களுக்கு ஒன்று வெற்றியாகிறபோது இன்னொருவருக்கு அது தோல்வியாகிறது இல்லேயா? என் முடிவு கட்சி வெற்றி தோல்விக்கான பிரச்னைக்கும் மீறியது. எதிர்ப்பு என்கிற ஒரு அழிப்பு சக்தியின் தத்துவத்தின் வெற்றி தோல்வி விஷயம்; எதிர்ப்புக்காக எதிர்ப்பு என்கிற உச்ச நிலேக்குப் போய் விட்ட ஒரு நினைப்போட்டத்துக்கு தோல்வி. எதிர்ப்புக்கு ஆக்க ரீதியாக ஒரு அர்த்தம் உண்டு. என்கிற உணர்வுக்கு வெற்றி என்று கூடச் சொல்லலாம், 'எதிர்ப்புக்'கு மதிப்பு கொடுப்பதானால். ஆகையால் இந்த வெற்றி தோல்வியை நானே கொண்டாடிக்கிறேன். என் மட்டுக்கு. கட்சிக்கு தேவையில்லே, ஊருக்கும் தேவையில்லே,'

முந்தினவர்களுக்கு சொன்ன அதே அமைதிக் குரலில்தான் பேசி நிறுத்தினார். சந்தர்ப்பத்தை பயன்படுத்தி ஒரு புதுத் தலைவரை அன்று கூட்டத்துக்கு பெற வந்திருந்தவர்களுக்கு மேலே விவாதிக்கத் தோன்றவில்லே அவரோடு. இருந்தாலும் ஏதோ ஒருவித திருப்தியுடன் எழுந்தார்கள்.

'ஒரு வார்த்தை' என்று ஆரம்பித்தார் சுந்தர லிங்கம். நான் கூட்டத்துக்கு வருகிறேன்' என்றார். வந்தவர்கள் ஒருவரை யொருவர் பார்த்துக் கொண்டார்கள். முகத்தில் திருப்தி காட்டிக் கொண்டார்கள். புறப்பட்டுச் சென்றார்கள். போகும்போது, கூட்டத்துக்கு வந்ததும் பிறகு நெருக்கி தலைமைவகிக்க செய்துடலாம் என்று பேசிக்கொண்டு போனது சுந்தரலிங்கத்துக்கு தெரிய நியாயம் இல்லை.

இவர்களும் போன பிறகுதான் முதலியா ருக்கு முழு பாரமும் இறங்கினமாதிரி இருந்தது. பிறந்த இடம், புகுந்த இடம் என்பார்கள் ஒரு பெண்ணுக்கு. தனக்கும் அப்படி. இப்போது இரண்டு பேருக்கும் விளக்கியாச்சு. தான் விளக் கினது அவர்களுக்கு புரிந்ததா? அதை ஏற்றுக் கொண்டார்களா? அது எப்படி அவருக்குத் தெரி யும்? தன் பங்கை செய்தாகிவிட்டது மேற் கொண்டு அவர்கள் பாடு.

மைக்கில் 'அச்சமில்லை' முடிந்து 'தண்ணீர் விட்டோ வளர்த்தோம், சர்வேசா இப்பயிரைக் கண்ணீரால் காத்தோம், கருகத் திருவுளமோ?' ...என்று ஏக்கமாக எழுந்துஇறைஞ்சலாக வந்தது. சர்வேசனை இன்னைக்கு கேட்டு என்ன பிரயோச னம்?' வாய்விட்டுச் சொல்லி சிரித்துக்கொண்டார் சுந்தரலிங்கம். பதினேழு வருஷமாக ஒருத்தனை ஒருத்தன் எதுக்குன்னு தெரியாமல் எதிர்த்துக் கொண்டே இருந்தால் சர்வேசன் அதுக்கு என்ன பண்ணுவான்? புத்தியைத்தான கொடுப்பான். கழநீர்ப்பானையிலே கையை முக்கவா சொன்னான்? கூத்துத்தான்! என்னவோ பைத்தியம்மாதிரி நான் தான் இதெல்லாம் இப்போது பேசிக்கிட்டு இருக் கேனே?

'எண்ணமெல்லாம் நெய்யாக எம்முயிரினுள் வளர்ந்த...'

ஆமாம், எண்ணமெல்லாம் நெய்யாக வளர்ந் துதா? நொய்யாக வளர்ந்தது. அதனாலேதான் கொதி தாங்கவில்லை. அழிஞ்சுபோச்சு சோறு. முதலியாருக்கு எரிச்சல்மேல் எரிச்சலாக வந்தது. அண்ணைக்கு புத்தி வரதுக்கு பாரதி பாடினான். வந்த புத்தியை பறிகொடுத்துவிட்டு மறுபடியும் இதை பாடப்போறான்று நினைச்சா இருப்பான்? 'கண்ணிரண்டும் விற்று சித்திரம் வாங்கினால்' என்று அன்றைக்கு கைகொட்டிச் சிரித்தான். இண்ணைக்கு சித்திரத்தை வாங்கிட்டு கண்ணை குத் திக்கிட்டு நிற்கப் போரான்னு அவன் எங்கே நினைச்சிருக்கப் போகிறான்? இவன்தான் தன் நிழலோடேயே போராட புறப்பட்டுட்டானே சுதந்திரத்தை மடியிலே வச்சுக்கிட்டு!...

இப்படி முதலியார் மனசை ஓட்டிக்கொண்டு இருக்கிறபோது மைக்கிலிருந்து ஒரு குரல் கெட்டி யாக கேட்டது. 'அன்புமிக்க தோழர்களே, பெரியோர்களே, கூட்டம் இன்னும் கொஞ்சநேரத் தில் ஆரம்பமாகிவிடும். உங்களுக்கு ஒரு மகிழ்ச்சி தரும் செய்தியை தெரிவித்துக் கொள்கிறேன்— இன்றைய கூட்டத்துக்கு நமது மதிப்பிற்குரிய திரு சுந்தரலிங்க முதலியார் அவர்கள் தலைமை வகிக்க,...சட்டென பேச்சு நின்றது. யாரோ வாயடைத்த மாதிரி. தெருவிலே நடக்கிறபோது அவியாத சிகரெட் துண்டை மிதித்துவிட்டமாதிரி பதறிப் போனார் சுந்தரலிங்கம். நாலணா காசு கொடுத்து மெம்பராக சேர்ந்த உடனே சுந்தர லிங்கம் எல்லாத்துக்கு இழுபடுவான்னு அவங்களா எடுத்துக்கிட்டாங்களா? கூட்டத்துக்கு நான் தலைமையா...?

அவருக்கு சாய்வு நாற்காலியில் இருப்புக் கொள்ளவில்லை. பரபரப்புடன் உடை மாற்றிக் கொண்டு மைதானத்தை நோக்கி வேகமாக நடந் தார். முதலியார் அதோ வராரு, வந்துக்கிட்டு இருக்காரு' என்று கூட்டக் குரல்கள் முணு முணுத் துக் கொண்டன. 'முதலியார் நேரே மேடையை நெருங்கினார். மேடைமேலே இருந்த நாற்காலியை சுட்டிக் காட்டி யாராரோ அழைத்தார்கள். அவர் காதுலே அதெல்லாம் விழுந்ததா, பார்த்தாரா? நேரே மைக் முன்னாலே போய் நின்றார் சுந்தரலிங் கம். யாருக்கு புரிந்திருக்கும்? விழித்துப் பார்த் துக்கொண்டிருந்தார்கள் அத்தனை பேரும்.

மைக் வேலை செய்கிறதா என்று கையை சொடுக்கிப் பார்த்துக்கொண்டார் சுந்தரலிங்கம். திருப்திப்படுத்திக் கொண்டு அமைதியாக ஆரம் பத்தார். 'எனது மதிப்புக்குரிய பொது மக்களே, இன்றைய கூட்டத்துக்கு நான் ஏதோ தலைமை வகிக்கிறதாக மைக்கிலே கேட்டுத்தான் அவசர மாக வந்திருக்கேன். இல்லாவிட்டால் கொஞ்சம் பின்னால் வந்திருப்பேன். காலையிலே இருந்தே சுந் தரலிங்கம் பேரு தான் ஊரு முழுக்க அடிபட்டுக் கிட்டிருக்கும், எனக்கு தெரியும். இப்போது இந்த அதிசய சமாச்சாரம் நான் முதலிலேயே சொல்லிவிடுகிறேன். இதுக்குமுன்னே எத்தனையோ கூட்டத்துக்கு இங்கே தலைமைதாங்கி இருக்கேன். நான் கூட்டத்துக்கு தலைமை வகிக்க வரவில்லை. இப்போ. சுந்தரலிங்கம் இன்னும் அவ்வளவு மட்ட மாகப் போய்விடவில்லை. நீங்கள் முதலியார் முதலி யார் என்று பெருமை கொடுத்து பேசிக்கொண்ட சுந்தரலிங்கம் கட்சி விட்டு கட்சி மாறினான். அது உண்மை. இருக்கிற முத்திரைகளை மறுக்க முடி யாது. அழிக்கவும் மனசு வராது. கண்ணீராலேயோ, ரத்தத்தாலேயோ, தண்ணீராலேயோ, அவனவன் வளர்த்த பயிராச்சே. மனசு வருமா அழிக்க? ஏன் அழிக்கவும் வேண்டியதில்லை, அவனவன் முத் திரை இருந்துட்டுப் போகுது. நான் அதைப்பற்றி கவலைப்படவில்லை. ஆனால் ஒன்று. நான் ஏதோ ஒரு சட்டையை கழட்டிப் போட்டுட்டு இன்னொரு சட்டையை மாட்டிக் கொள்கிற காரியமாக செய்யவில்லை. ஒரு உடம்பை உதறிவிட்டு இன் னொரு உடம்புக்குள்ளே புகுந்துக்கிறமாதிரி காரி யம், நான் எதிர்க்கிறதுக்கு இங்கேயும் இந்த ஊர் லேயும், வேறே எங்கேயும் எதுவும் இல்லை என்கிற முடிவு பேரிலே தான் செய்திருக்கேன். காலை யில் பார்க்க வந்த இரண்டு கட்சிக்காரர் கிட்டே யும் இதைத்தான் சொன்னேன். அவர்கள் கிட்ட

சொல்லாததைத்தான் நான் இங்கே சொல்லப் போகிறேன்.

நான் எதிர்க்க வேண்டியது எதுன்னு நேற்று தான் கண் திறந்தது. எதெதையோ விரோதமாக கருதி வெறுப்பை மதிச்சு, என் எதிர்ப்பு சக்தியை வளர்த்துவந்திருக்கேன். எத்தனை கோடி விநாடி களை வீணுக்கி இருக்கேனே. மனசு நடுங்கிவிட்டது. இதே மேடையிலே கட்சி, கொள்கை இதெல்லாம் உதறிவிட்டு, ஊர்ப்பொதுக் காரியத்துக்கு ஒரு நாள் ஒத்துப்போய் நல்ல காரியம் எல்லாம் செய்துவிட்டு, மறுநாள் அதே இடத்திலே கட்சிக் கொள்கையை மறுபடியும் தூக்கிக்கிட்டு துவஜம் கட்டி நாய் பேய் என்று பேசிக்கிற அரசியல்வெறி யிலே படாத நியாயம் நேற்றுத்தான்பட்டது. பாகிஸ்தான்காரன் சொல்லிக் கொடுத்தான். சுதந்திர இயக்க காலத்தில் தேசியம்னு என்ன என்ருல் எனக்குத் தெரியாது. கண்ணீர் விட்டு, ரத்தம்விட்டு, தண்ணீர்விட்டு வளர்த் தவங்களை பார்த்துக்கிட்டு இருந்தவன். இப் போது தேசம் என்கிறது என்ன என்பது தெரியுது எனக்கு. இதுக்கு மேலே உங்களுக்கு விளக்க வேண்டுமா? எனக்கு மேலே பேச எதுவும் இல்லை இப்போது. ஆனுல் ஒன்றை மட்டும் சொல்லி உட்காருகிறேன்.

கூட்டத்துக்கு தலைமை வகிக்க வரவில்லை என் றேன். தலைமையிலே இருந்து தலைமைக்குத் தாவி, புது நாற்காலியை பார்க்க ஆசைப்பட்டவனுக என்னை மதிச்சது தப்புக் கணக்கு. நான் இருந்தது ஒரு கட்சி. இன்று வந்திருப்பதும் ஒரு கட்சிதான், உங்கள் பார்வையில் நான் சொன்னேனே இப் போது நாடு என்பது என்று தெரிகிறது எனக்கு என்று. அதேமாதிரி கட்சி என்ருல் என்ன என் பதும் எனக்குத் தெரியும். ஆனுல் நான் வந்திருப் பது ஒரு கட்சிக்கு இல்லை. சுமார் இருபது ஆண்டு களுக்குமுன் இருந்த ஒரு ஸ்தாபனத்தின் நினைவில் —இல்லை கனவில் என்ருலும் சரி—கொண்டுதான். தன் ஊருக்கு ராஜாவாக இருக்கலாம், வேறு ஊருக்கு? ஆகவே இன்று முதல் நான் இந்த இடத்திலிருந்து புது ஆரம்பம் செய்யப் போ கிறேன். மகாத்மா காந்திக்கு ஜே!

அவரையும் மீறின ஆவேசக் குரலில் கோஷம் எழுந்தது. எதிர்பாராது பாதிக்கப்பட்ட கூட்ட மும் லேசாக முணுமுணுத்தது. சமீப காலத்தில் அதை கேட்டிராத கூட்டம். மைக்கிலிருந்து திரும் பினுர் சுத்தரலிங்கம்.

'இதோ நாற்காலி! இங்கே உட்காருங்க'— குரல்கள். மேடைப் பக்கம் திரும்பிப் பார்த்தார் சுந்தரலிங்கம். அமைதியாக சிரித்தார். 'ஒரு தொண்டனுக்கு நம்ப மகாத்மா காந்தி காட்டி இருக்கிற இடம் அதோ! என்று மேடைக்கு எதிரே ஆயிரத்துக்குக் கீழே ஒன்ருக, தரையில், புழுதி மண்ணில் உட்கார்ந்திருந்தவர்களோடு போய் உட்கார்ந்தார் சுந்தரலிங்கம்.

சில விநாடிகள் கழித்துதான் மைக் 'மதிப்பிற் குரிய...' என்று ஆரம்பித்தது.

பேனு பிடித்தால் மட்டும் கலைஞன் ஆகிவிடமாட்டாய்

இன்று தமிழ் நாட்டிலே ஒரு தப்பெண்ணம் பரவி வருகிறது. இலக்கிய மென்பது ஏதோ கிள்ளுக்கீரை என்று எண்ணி எவர் வேண்டுமாலு லும் எதை வேண்டுமென்ருலும் எழுதத் துவக்கி விடுகிருர்கள். அவைகளின் மலிவாலும் சுலபத் தாலும் மக்களிடம் அதற்குச் செலாவணியும் கிடைத்து விடுகிறது

வெறும் பேனுமட்டும் பேசினுல் போதாது, ஒருவனுடைய உள்ளம், உயிர் யாவும் பேனு முனை யில் வந்து கூத்தாடினுல், அப்பொழுது அவ்வார்த் தைகளுக்கு உள்ள வீரியத்தை யாதொன்ருலும் அசைக்க முடியாது. வாழ்க்கையின் பலவிதமான ரகங்களும் கலைஞனுக்குத் தலைகீழ்ப் பாடமாகத் தெரியவேண்டும். அப்போது தான் அவனுக்கு வாழ்க்கையின் பூரணத்வம் விளங்கும், ஆனுல் அந்த ரகங்களைக் கற்பனை செய்து கலையோ கவி தையோ சிருஷ்டிக்கவேண்டும். இவ்வாறு செய் தால்தான் தமிழ் மொழி வளம் பெறும்.

வெறுமனே ஏதாவது எழுதித் தொலைக்க வேண்டுமே என்று எழுதுவதில் பயனில்லை, உண் மையான இலக்கியம் உள்ளத்தின் அடியிலிருந்து. அறிவின் போர்வையோடு வெளிக் கொட்ட வேண்டும்,

கலைஞர்களெல்லாம் பேனு பிடித்தவர்கள் ஆனுல் பேனு பிடித்தவர்களெல்லாம் கலைஞர் களல்ல.

ச. து. சுப்ரமண்ய யோகி,
(பேனுபிடித்தவர்களே' கட்டுரையில் 1934).

சம்பாஷணையை சரியாக எழுதத் தெரியாததால்—

சாதாரண மனிதன் கதை கவிதையை ரசிப் பது போல் சம்பாஷணைகளை ரசிப்பதில்லை இதற்கு முக்யமாகக் காரணங்கள் இரண்டு என்று சொல்ல லாம். அதுவும் ஆசிரியர்களின் தவறுதான். சம் பாஷணையை எழுதும் போது பேசுவதே போல் எழுத மனம் வருவதில்லை, அதன் 'சம்பாஷணைத் தன்மை' எப்படியோ நழுவிப் போகிறது. நல்ல வசனத்தின் ஒரு முக்கிய அம்சம் இப்படி மறைந்து போய்விடுகிறது. மேலும் தன் கருத்துக்களை சம் பாஷணையாக வெளியிட முயலும்போது, ஆசி ரியன் தான் சொல்வதே சரி என்று முன்னுடியே முடிவு கட்டிக்கொண்டு ஆட்சேபங்களை சரியாகச் சொல்லாமலும் விஷயத்தைச் சரியாக அலசா மலும் விட்டு விடுகிருன். இது வாசகனுக்குப் பெரிதும் ஏமாற்றத்தை 'அளிக்கிறது.

—க. நா. சுப்ரமண்யம்,
(தினமணி ஆண்டு மலர் 1937.)

பாரதிதாசன் — அழகின் சிரிப்பு

சி. கனகசபாபதி

(சென்ற வாரத் தொடர்ச்சி)

கிளியைப் பற்றிய பாட்டு பாரதிதாசனின் இந்த நடப்பியல் பார்வைக்கு இன்னொரு உதாரணம் :

"தென்னைதான் ஊஞ்சல் ! விண்தான்
திருவுலா வீதி ! வாரித்
தின்னத்தான் பழம்கொட் டைகள் !
திருநாடு வையம் போலும் !
புன்னைக்காய்த் தலையில் செம்மைப்
புதுமுடி புனைந்தி ருப்பாய் !
உன்னைத்தான் காணு கின்றேன்
கிள்ளாய்நீ ஆட்சி உள்ளாய் !"

கிளியைச் சாக்கிட்டு, இயற்கையை உலகம் தழுவிய அன்பைத் தமது பாட்டில் பொருளாக்கினர் பாரதிதாசன் என்பது முதலில் நாம் பார்க்கவேண்டியது இங்கே. கிளியின் நாடு இந்த உலகமே என்பதும், புன்னைக்காய்த் தலையில் செம்மைப் புது முடியைக் கிளி புனைந்திருப்பதாகக் கூறுவதும் நடப்பியல் பார்வைக்குப் பொருத்தமானவை. இயற்கையைப் பாடும்போதே சமுதாய நனவு நிலையில் திரும்பினாலும் கலைத்தன்மை குறையவில்லை பாரதிதாசனின் கிளிப்பாட்டு. கிளியை வைத்து அழகும், செம்மையுமான அரசியலைப் பற்றிய சமூக நிலைக் கருத்து ரசனையுடன் வெளியீடு ஆகும்படி படைத்திருக்கிறார் பாரதிதாசன். நடப்பின் இயற்கைப் பேச்சிலிருந்து மொழி உருவாக்கி, அந்த மொழியில் கிளியின் புதுப் படிமம் படைத்து, கிளி ஊஞ்சலாடிப் பறப்பதை அதுக்குத் தக்கபடி உயர்த்தும் ஒலிநயத்துடன் பாடியிருக்கிறார் பாரதிதாசன். இயற்கையைப் பாடும் பாரதிதாசன் கலைக்கு இந்தப் பாட்டு நல்ல உதாரணம்.

5

இதுவரைக்கும் என்னைத் தொடர்ந்து வந்த கவிதை ஆய்வுடையவர்களும், வாசகர்களும் இனிமேலும் விலகிப் போக வேண்டாம் என்று கேட்டுக் கொள்கிறேன். அழகின் சிரிப்பில் பாரதிதாசனுடைய புனைவியல் பார்வையை என் ஆய்வுக்கு எடுத்துக்கொள்ள வேண்டிய கட்டம் வந்துவிட்டது, ஆங்கிலத்தில் டி. இ. ஹ்யூம் வலுவாகச் சொன்னதை இங்கே நினைக்காமல் என்னால் இருக்க முடியவில்லை. மேலும் பாரதி புதிய புனைவியல் பாங்காகப் பாடியது தமிழுக்குத் தற்காலத் தோரணைதான் என்று நானே எழுதியதும் நினைவில் வந்து நிற்கிறது. 'அழகின் சிரிப்பில்' பாரதிதாசனுடைய புனைவியல் பாங்கை எப்படி மதிப்பிடலாம்? திறனாய்வுக்கு இது ஒரு சோதனைதான்.

"அருவிகள் வயிரத் தொங்கல் !
அடர் கொடி பச்சைப் பட்டே !
குருவிகள் தங்கக் கட்டி !
குளிர் மலர் மணியின் குப்பை !"

ஒவ்வொன்றுக்கும் அதிகப்படி விளக்கம் தேவையில்லை. குருவிகளைத் தங்கக் கட்டி என்று ரொம்பவும் புனைந்திருக்கிறார் பாரதிதாசன்.

"தங்கத்தை உருக்கி விட்ட
வாயோடை தன்னி லேஓர்
செங்கதிர் மாணிக் கத்துச்
செழும்பழம் முழுகும் மாலை."

ஒரு அதிகப்பட்ட ஆர்வமாகப் புனைந்து கூறுவதை இதிலும் காண்கிறோம். வானம்என்பது தங்கத்தை உருக்கிவிட்ட ஓடையாம் ; அதில் மூழ்குகிறதாம் மாலைச் சூரியன் என்ற மாணிக்கப்பழம்.

காலைச் சூரியனையும் பாடும்போது பாரதிதாசன்,

"எழுந்தது செங்கதிர் தான்
கடல்மிசை ! அடடா, எங்கும்
விழுந்தது தங்கத் தூற்றல் !"

என்று புனைவியலாகவே பாடியிருக்கிறார்.

"இருகரை ததும்பும் வெள்ள
தெளிவினில் எறியும் தங்கச்
சரிவுகள் ! நுரையோ முத்துத்
தடுக்குகள் ! சுழல்மீன் கொத்தி
மரகத வீச்சு......"
"மேற்கிளை யின்வீழ் தெல்லாம்
மின்னிடும் பொன்னி ழைகள் !"
"வானத்துக் குமிழ்ப றந்து
வையத்தில் வீழ்வ தைப்போல்
தானம்பா டும்சிட் டுக்கள் ....."

இப்படியெல்லாம் வரக்கூடிய இடங்கள் 'அழகின் சிரிப்பில்' நடப்பை விட்டு விலகி மிகைப்படுத்திக் கூறுகிற தோரணையில் அமைந்துகிடக்கின்றன : ரொம்ப ஆர்வத்துடன் வர்ணனைகளைப்படைக்கின்றன. இந்தக் கட்டுரையில் இதுக்கு முன்பு எடுத்துக் காட்டிய இருள் பறவை, கதிரவன் ஆகிய சுழல்வண்டு, ஆற்று வெள்ளத்தின் வரவு, கிளியின் உடல் வண்ணம்போல் கடல் மணல், புன்னைக்காய்த் தலையில் புது முடி புனைந்த கிளி ஆகிய நடப்பியலான படிமக் காட்சிகளை இங்கே நினைவில்

கொண்டு பார்த்தால் உண்மை நன்ருக விளங்கும். குருவிகளைத் தங்கக் கட்டி என்பதும் மாலைச் சூரியனை மாணிக்கப் பழம் என்பதும், காலைக் கதிரொளியைத் தங்கத் தூற்றல் என்பதும், மீன் கொத்தியை மரகத வீச்சு என்பதும். ஆல விழுதுகளைப் பொன்னிழைகள் என்பதும், சிட்டுக்களை வானக் குமிழ் என்பதும் புனைவியல் பாங்கே அல்லாமல் வேறு என்ன ?

ஆர்வம் மிகைப்பட்ட வர்ணனையாக வருவதைக் கொண்டு ஒரு கவிஞரைப் புனைவியல்காரர் என்று முடிவு கட்டக்கூடாது என்று இவ்விடம் ஒரு கேள்வி எழக்கூடும். பாரதிதாசன் இயற்கையைப் பார்த்து ஒரு புனைவியலான வாழ்க்கை நோக்கே உடையவராகத் தோன்றுகிருர். இதை அடுத்துச் சொல்லும் முன்னே, பாரதிதாசன் 'காடு' என்னும் தலைப்பில் பாடியுள்ள ஒருபாட்டை இங்கே பார்க்க விரும்புகிறேன்.

''இழந்த பெட் டையிணைக் கண்டே
எழுந்தோடும் சேவல் வாலின்
கொழுந்துபட் டெழுந்த கூட்டக்
கொசுக்களை முகில்தான் என்று
தழைந்த தன் படம்வி ரிக்கும்
தனிமயி லால் அடைத்தேன்
வழிந்திடும் ; கரடி வந்து
மயிலுக்கு வாழ்த்துக் கூறும்.''

இதுக்குப் பொருள் வாசகர்களுக்கு விளங்காமல் போய்விடாது. கோழியைத் துரத்திய சேவல் தன் வாலை ஆட்டியதாம். அதனுல் கொசுக்கள் அடிபட்டு ஒரே கூட்டமாய் மேகம் போலவே மொய்த்தனவாம். மேகமோ என்று அங்கிருந்த மயில்கள் தோகை விரிக்க, அதனுல் தேனடையிலிருந்து தேன் வழிய, தேனைக் குடிக்க அங்கே கரடி வந்து மயிலை வாழ்த்தியதாம். நடப்பைவிட்டு விலகிய உயர்வு நவிற்சியான கற்பனை இது. குமர குருபரரின் பழைய தோரணை அல்லவா இது? இப்படியுமா அழகுப் பார்வைக் கவிஞர் பாரதி தாசன் பாடியிருக்கிருர் என்று நமக்குத் தோன்றுகிறது.

6

பாரதிதாசனுடைய புனைவியல் பார்வையை நான் குறைகூற விரும்பவில்லை. ஆனுல் மேலே காட்டிய உயர்வு நவிற்சியான பழைய தோரணையில் பாரதிதாசன் பாடியது தற்காலத்துக்கு ரசனை தராது. பாரதியுடன் புதிய புனைவியல் பாங்கில் தமிழுக்குத் தற்காலத் தோரணை பிறந்தது என்பது உண்மை. பாரதிக்குப் பின் பாரதிதாசன் அதே புனைவியல் பாங்கில் வழி தொடர்ந்தார்.

ஆனுல் 'அழகின் சிரிப்பு' என்னும் ஒரு புத்தகத்தில் இப்படி ஒரு சமயம் நடப்பியல் பார்வையோடும் இன்னொரு சமயம் புனைவியல் பார்வையோடும் பாரதிதாசன் பாடியதைக் காணும்போது அவரிடம் ஒரே பார்வை விழவில்லை என்றும் பார்வையில் ஒரு குழம்பல் நிச்சயமாக ஏற்பட்டிருக்கிறது என்றும் தெரிகிறது. ஒரு பொருளை ஒரு தலைப்பில் பத்துப் பாட்டுக்களாகப் பாடும்போது இரண்டு பார்வைகள் வந்து விழுந்து குழம்பலாமா என்று எண்ணத் தோன்றுகிறது.

பழய சாத்திரங்களை அப்படி அப்படியே நம்பக்கூடாது ; உண்மை எதுவோ அதுவே ஏற்றுக் கொள்ளப்படவேண்டும். இயற்கையைக் கண் திறந்து பார்க்கவேண்டும் ; உலகத்தை நேரே காணக் கண்திறக்க வேண்டும் இந்த எண்ணத்தின் புதுமையுடன் தோன்றியது தமிழில் மறுமலர்ச்சி மொழிக்கும் இலக்கியத்துக்கும் உண்டான மறுமலர்ச்சி மட்டுமல்ல இது. தமிழ் மக்கள் வாழ்விலும் பூத்த மறுமலர்ச்சிதான்.

இந்த மறுமலர்ச்சியில் பாரதி கவிதை பிறந்தது ; பாரதிதாசன் கவிதையும் பிறந்து வழி தொடர்ந்தது.

ஒரு மறுமலர்ச்சியில் விஞ்ஞான நோக்கிலிருந்து பார்த்தால் அவசியமான. பகுத்தறிவை நம்பிக்கொண்டு கவிதை பாடத் தொடங்கிய பாரதிதாசன் இயற்கையை நேரே காணக் கண் திறந்திருப்பார். இயற்கைக்கும் மனிதனுக்கும் இடையே முன்னுல் இருந்ததைவிடவும் ஒன்று கலந்த செயல் வடிவான ஒற்றுமைத் தொடர்பு வேண்டும் என்று அவர் விரும்பியிருப்பார். ஒரு விஞ்ஞான நோக்கான பகுத்தறிவால்மட்டும் இந்தத் தொடர்பை உண்டாக்கிவிட முடியாது என்றும், ஒரு வியப்பின் மறுமலர்ச்சியில்தான் இயற்கையையும் மனிதனையும் ஒன்றுபட்ட தொடர்பாக்க முடியும் என்றும் அவர் கருதியிருப்பார். பாரதிதாசனின் இப்படிப்பட்ட கருத்தே அவருடைய புனைவியல் பார்வை தோன்றக் காரணம். இயற்கைக்கும் மனிதனுக்கும் ஒரு இயந்திரத் தொடர்பே சொல்ல முடியும் என்ற வறட்சித் தனமான கொள்கை கூடாது என்றும் பாரதிதாசன் சிந்தித்ததால் அவருடைய புனைவியல் பார்வை தோன்றியிருக்க வேண்டும் என்று எனக்குத் தோன்றுகிறது.

ஆங்கிலக்கவிஞர் : பிளேக் புலியைப் பாடியிருக்கும் பாட்டு வாசகர்களுக்குத் தெரிந்திருக்கலாம்.

''புலியே ! புலியே ! காடுகளில் இரவில்
வெளிச்சமாய் எரியும் உனது தோற்றம் !
எந்த அழிவிலாக் கைகளோ கண்களோ
அமைக்க முடியுமோ
அச்சப் படுத்தும்உன் உடல்கட்டு
[நிலையை ?''

இதில் வியப்பின் மறுமலர்ச்சியில் : பிளேக் பாடியிருப்பது தெரிகிறது அல்லவா? பாரதிதாசன் இதேபோல,

''அழகெனும் தலைச்ச ரக்கைக்
கிள்ளி யமைத் திட்ட கிள்ளாய்''

என்று பாடியதிலும் இயற்கையைப் பார்க்கும் ஒரு வியப்பின் மறுமலர்ச்சிதான் இருக்கிறது.

இயற்கையான மனிதன் ; விஞ்ஞான பூர்வமாகத் தெரிந்த அவனுடைய உலகம். இந்த இரண்டு மட்டுமே கண்முன்னே நடப்புக்கள் என்று பார்த்த கவிஞர் பாரதிதாசன். 'உய்விக்கவோ அல்லது கண்டிக்கவோ ஆன்மா என்பதை மனிதன் கொண்டிருக்கார்த இந்த உலகம்' என்று ஆங்கிலக்

கவிஞர் ஸ்டீபன் ஸ்பெண்டர் எழுதியிருக்கிறார். அதே இந்த உலகம் பாரதிதாசனுக்குப் புலப்பட்டது.

இந்த உலகத்தில் தானே ஒரு மனிதப்பயணம் நடக்கிறது. மனிதப் பயணத்தில் சமயத் தாகம் முக்கியம் இல்லாமல் போய்க்கொண்டிருக்கிறதே. சமயத்தாகம் முக்கியமாக இல்லாமல் மனிதப் பயணத்தில் எங்கே போவது? இயற்கையிடம் போகலாம் என்று பாரதிதாசன் கருதிக் கொண்டார். ஒரு வியப்பின் மறுமலர்ச்சியுடனும் இயற்கையிடம் போகலாம்; இயற்கைக்கும் மனிதனுக்கும் இடையே இயந்திரத் தொடர்பு இருப்பதாகச் செல்லுவதை மாற்றி ஒன்றுகலந்த ஒற்றுமைத் தொடர்பை உருவாக்கலாம். இப்படி எண்ணிக் கொண்டுவந்த புனைவியல் பார்வைதான் பாரதிதாசனின் 'அழகின் சிரிப்பில்' இருக்கிறது. அதாவது இயற்கையைக் கொஞ்சம் மிகைப்படுத்திச் சொல்லணும் என்ற கலைப்போக்கு இது.

7

கவிதை நமது காரியத்துக்கு ஒரு வேகத்தைக் கொடுக்கக்கூடியதாக இருந்தது பாரதிகாலத்தில். அதே கவிதை, அதே வேகத்தை தனது நாகரிகத்துக்குக் கொடுக்கக்கூடியதாக இருந்தது பாரதிதாசன் காலத்திலும், ஆனால் நாம் வாழ்ந்து கொண்டிருக்கும் இன்று நிலைமை மாறியிருக்கிறது. கவிதையைப்பற்ற அவ்வளவு சொல்ல முடியாது இன்று, இது நமது நாகரிக நிலைமையில் மாறுதல் விளைந்துகொண்டிருப்பதால் ஏற்பட்டிருக்கலாம்.

இன்று வாழும் சமூகம் கவிஞனைத் தனிமைப்படுத்தி ஒதுங்கி நிற்கச் செய்கிறதாக என் பார்வைக்குத் தெரிகிறது. ஒருவேளை என் பார்வையில்கூட தவறு இருக்கலாம். பாரதிதாசனையும் கொஞ்சம் ஒதுங்கிநிற்க வைத்துப் பார்த்தது சமூகம். கவிதையைக் காட்டிலும் வசனத்துக்கு ஒரு பெரிய திருப்பம் எழுந்ததைக் காரணம் காட்டலாம் என்று நினைக்கிறேன்.

சமூகத்திலிருந்து கவிஞனை ஒதுக்கநிலைக்குத் தள்ளினால் என்ன? சரி என்று ஒதுங்கிப்போய் நின்று பார்வை செலுத்த வேண்டியது தானே? ஒதுக்குப்புறம் நிற்க நேர்ந்தாலும் அதை ஏற்றுக் கொள்ளாமல் சமூகத்தோடு போகிற போக்கில் சேர்ந்து போகலாமா? எதிர்நீச்சு, சோதனையில் அகப்பட்ட கவிஞனுக்குத் தவிர்க்க முடியாதது ஆகிறது. இன்று ந. பிச்சமூர்த்தியும் அவரைப் போலக் கவிதை எழுதுகிறவர்களும் ஒதுங்கிநின்று எதிர் நீச்சு புரிகிறார்கள் தவிர்க்க முடியாமல்.

பாரதிதாசன் எதிர்நீச்சு புரியாதவர் என்று நான் சொல்ல வரவில்லை. 'சஞ்சீவி பர்வதத்தின் சாரலும்,' 'புரட்சிக் கவியும்,' 'உலகப்பன் பாட்டும் எதிர்நீச்சான படைப்புகளே. அவைகளின் சிந்து முதலான யாப்புருவங்களைப் பார்த்தும் எதிர்நீச்சான படைப்புத் தன்மையை மதிப்பிடலாம்.

'அழகின் சிரிப்பி'ல் அறுசீர் விருத்தம் என்ற மரபு வழிப்பட்ட யாப்புருவமே இருந்தாலும், கதை கூறும் போக்குக்கே அதிகம் பொருந்திய அந்தப் பழய யாப்பைத் தமக்கென்று வளைத்துப் பயன்படுத்தியிருக்கிறார் பாரதிதாசன். பொருள் உணர்ச்சியைக் கெடுக்கும் ஓசை விருப்பின் பக்கம் செல்லாமல். சாதாரணப் பேச்சிலுள்ள இயற்கையான ஒலி நய அசைவு காட்டிஅவர் பாடியிருப்பது புதுமைக்கு வழி செய்திருப்பது ஆகும்.

ஆனாலும் பாரதிதாசன் சமூகத்தோடு போகிற போக்கில் சேர்ந்து போகிற கலைப்போக்கையும் பின்பற்றினார். இதனால்தான் பாரதிதாசன் 'அழகின் சிரிப்பி'ல் ஒரு சில பாட்டுக்களில்ரொம்ப இலேசாகத் தெரியும் எளிமை, ரொம்ப இலேசாகத் தெரியும் நீதி போதனையியல்' என்பவைகளை எதிர்க்க முடியாமல் அப்படியே பாடிவிட்டார்., சமூக நிலைப் பாட்டாக மக்களுக்காகப் பாடவேணும் என்று புறப்பட்டதால் இந்த இரண்டு ரசனை குறைந்த போக்குகளும் பாரதிதாசனிடம் அங்கங்கே தெரிகின்றன.

''எத்தனை பெரிய வானம்!
எண்ணிப்பார் உனையும் நீயே;
''அறிவென்றால் ஒளியாம். ஆம்ஆம்!
அறியாமை இருளாம். ஆம்ஆம்!''

இதையெல்லாம் படிக்கும்போது 'இருள்மை' யாக எழுவதின் பக்கமே 'அழகின்சிரிப்'பில் பாரதிதாசன் திரும்பவில்லை'என்று தெரிகிறது. பிரெஞ்சு மொழி, பாண்டிச்சேரியிலிருந்த அவருக்குத் தெரியும் என்று கேள்வி ஆனால் பிரெஞ்சுக் கவிஞர்களின் இருள்மை, குறியீட்டியல் முதலிய கலைப் போக்குகளிலிருந்து ஒன்றுமே எடுத்துக்கொள்ளவில்லையே பாரதிதாசன் என்று எண்ணத் தோன்றுகிறது.

8

'அழகின் சிரிப்பி'ல் உருவகங்களைப் படைத்து எழுதலாம் என்று பாரதிதாசன் விரும்பியிருக்கிறார். ஒரு பாட்டில் சந்திரனைச் சேவல் என்று உருவகப்படுத்தி, அது நாலு திசையும் கூவி ஒளி பாய்ச்சிவிண்மீன்கள்என்றகோழிக்குஞ்சுகளைமேற் பார்வை செலுத்துவதாகச் சொல்லி, அப்புறம் அந்தத் 'திங்கட் சேவல்' 'பூனை இருட்டை'யும் வெளுத்துத் தள்ளும் என்று முடித்திருக்கிறார். இன்னொரு பாட்டில் நிலாவை நீல முக்காட்டுக்காரியான பெண் என்று உருவகப்படுத்தி, காய்ந்த பாலில் உறை மோர் ஊற்றி மத்தால் கடைந்து பானையில் வந்த வெண்ணெயை அள்ளிக் குன்றின் மேல் வீசிவிட்டாள் அந்த நிலாப் பெண்ணாள் என்று முடித்திருக்கிறார். இப்படி வந்த பாரதிதாசனின் உருவகங்கள் தற்காலத்துக்கு ரசனை தராதவை என்று நான் கருதுகிறேன், கண்முன் அழகான இயற்கையை வெறுமனே ஒரு உருவக இயற்கையாகச் செய்வது உயர்ந்த கலைத்தன்மை ஆகாது.

9

இந்தக் கட்டுரையின் கடைசிப் பகுதிக்கு வருகிறேன். முன்னே இயற்கையையும் அன்பையும் பாட்டுக்குப் பொருளாக்கினார் 'அழகின் சிரிப்பி'ல் பாரதிதாசன் என்று பார்த்தோம் அல்லவா? அது ஒன்றே பாட்டுக்குப் பொருளாக முழுக்கவும் அவர் எடுத்துக்கொள்ளவில்லை. இடையே பாரதிதாசன் புனைவியல் காட்சியோடு ஒன்று கலந்த பாலுணர்ச்சியைப் பாடத் தொடங்கி விடுகிறார்.

ஒரு பொருளைப் பற்றிப் பாடுகிற பத்துப் பாட்டுக்களில் இயற்கையையும் அன்பையும் ஒரு சமயம் பாடி, புனைவியல் காட்சியையும் பாலுணர்ச்சியையும் மறுசமயம் பாடுவதைத்தான் நான் இங்கே ஆய்வுக்கு எடுத்துக் கொள்கிறேன்.

'இருள்' என்ற தலைப்பில் முதல் பாட்டு இருள் பறவையைப் பற்றிய அழகிய படிமப்பாட்டு. அதே தலைப்பில் நாலாவது பாட்டும் ஐந்தாவது பாட்டும் புனைவியல் காட்சியையும் பாலுணர்ச்சியையும் சொல்லுகின்றவை. இரவுநேரம். வெளியே இருட்டுப்பெண் போர்வையை உடம்பில் மூடி, கண்களைத் திருப்பி நின்று, தன் கூந்தலில் நிலா வயிரவில்லையை வைத்துக்கொண்டிருக்கிறாள். அப்போது பெண்டாட்டி அருகில் நிற்க, கலங்கும் நெஞ்சம் அவள் திருமுன் செல்லுகிறதாம்.

''கள்ளரை வெளிப்ப டுத்தும்
இருட்பெண்ணே, கதைஒன் றைக்கேள் :
பிள்ளைகள் தூங்கி னார்கள் ;
பெண்டாட்டி அருகில் நின்றாள் ;
உள்ளமோ எதிலும் ஒட்டா
திருக்கையில், நிமிர்ந்தேன். நீயோ
வெள்ளைமுத் துக்கள் தைத்த
போர்வையை மேனி போர்த்தே.

'மண்முதல் விண்வ ரைக்கும்
வளர்ந்தஉன் உடல்தி ருப்பிக்
கண்மலர் திருப்பி நின்றாய் !
பின்புறம் கரிய கூந்தற்
கொண்டையில் ஒளியைக் காட்டும்
குளிர்நிலா வயிர வில்லை
கண்டேன் ; என்கலங்கும் நெஞ்சம்
மனைவியின் திரு முன் செல்லும் !''

இதில் தன்னுணர்ச்சியை வெளிப்படுத்துகிற கவிஞர் ஒரு பொதுநிலைக்குப் பாட்டை உயர்த்த வில்லை. இருளைப்பற்றிய வர்ணனைக் காட்சி புனைவியலானது; பாலுணர்ச்சியைத் தூண்டுவது 'தென்றலை'ப் பாடும்போது இப்படியும் பாரதிதாசன் பாடுகிறார்.

''உலைத்தீயை ஊது கின்றாய் ;
உலைத்தீயில் உருகும் கொல்லன்
மலைத்தோளில் உனது தோளும்.
மார்பினில் உன்பூ மார்பும்
சலிக்காது தழுவத் தந்து
குளிர்ச்சியைத் தருவாய் !'' பெண்கள்
விலக்காத உடையை நீபோய்
விலக்கினும், விலக்கார் உன்னை !''

இந்தப் பாட்டு வாசகர்கள் கேட்டதாக இருக்கும் என்று நினைக்கிறேன். குறும்புத்தனமான பாட்டு என்று இது பெயர் பெற்றது. இதிலுள்ள பாரதிதாசன் பார்வையை நான் மதிப்பிட விரும்புகிறேன். இதுவும் புனைவியல் காட்சியும் பாலுணர்ச்சியும் ஒன்று கலந்துவரப் பார்க்கும் பார்வைதான்.

'செந்தாமரை'யைப் பாடும் இடத்தில் அதில் தேன் உண்ணவரும் வண்டுகளைப் பாடுகிறார் பாரதிதாசன்.

''தேனுண்ண வண்டு பாடும் !
தேனுண்டபின் ஓர் கூட்டம்
தானோர்பால் தாவும் ! வேறோர்
தனிக்கூட்டம் களியாட் டத்தை
வானிடை நடத்தும் ! ஒன்று
மலர் என்னும் கட்டில் உண்டு
நானுண்டு என்றுறக்கம் கொள்ளும் !
நறும்பொடி இறைக்கும் ஒன்று.''

இங்கேயும் பாலுணர்ச்சியைப் புனைவியல் காட்சியோடு கலக்கிற கலைப்போக்கேஇருக்கிறது. வண்டுகளைக் கொஞ்சம் மிகைப்படவே பாலுணர்ச்சி தெரிய வர்ணிக்கிறார் பாரதிதாசன்.

சமயத்தாகம் முக்கியம் இல்லாத மனிதப் பயணத்தில் எங்கே போவது? பழய சாத்திரங்கள் தந்த நம்பிக்கைகளை வேண்டாம் என்று சொன்ன பின் மனிதப் பயணத்தில் எங்கே போவது? பாரதிதாசன் முன்னால் எழுந்த பூதாகாரமான கேள்வி இது. இயற்கையிடம் ஒரு அழகுணர்ச்சியுடன் மனிதப் பயணத்தில் போனால் போதும் என்று முதலில் நினைத்தார் பாரதிதாசன். அப்போது எங்கும் நிறைந்த அன்பின் வழியிலும் போகலாம் என்று அவருக்குத் தோன்றியது.

மறுபடியும் கவிஞர் பாரதிதாசனுக்கு மனசில் அமைதி உண்டாகவில்லை. மனசு மட்டும் தனித்த நிலையில் இல்லையே. புலன்களோடு சேர்ந்தல்லவா மனசும் இருக்கிறது. இதனால்தான் அழகான இயற்கைக்குப் பதிலாக மனிதப் புலன்களுக்கு வேண்டியதாகவே புனைவியல் காட்சியமைப்பை அவர் நாடினார். எங்கும் நிறைந்த அன்புக்குப் பதிலாக உடல் தசைக்கு வேண்டியதாகவே பாலுணர்ச்சியை அவர் நாடினார்.

''சஞ்சீவி பர்வதத்தின் சாரலில்' பாட்டின் முக்கிய கதைக் கருவுடன் சேர்ந்து புனைவியல் காட்சியையும் பாலுணர்ச்சியையும் பாடுவதாகிய துணைக்கூறு கூடவே வருகிறது.

''முன்னே இலைகொடுத்தால் முத்தம்
[பிறகென்றாள் ;
என்கிளியே நீமுத்தம் எத்தனை
[ஈவாய் என்றான் ;
என்றன் கரத்தால் இறுக உனைத்தழுவி
நோகாமல் முத்தங்கள் நூறுகொடுப்
[பேன்என்றாள் ;
ஆசையால் ஓர்முத்தம் அச்சாரம்
[போடென்றான்.',

குப்பனும் வஞ்சியும் சஞ்சீவி மலையின் மூலிகையைத் தேடிப் போகும்போது இவ்விதம் உரையாடுகிறார்கள். பாட்டின் முடிவு வரையிலும் இந்த வகை உரையாடல் அவர்களுக்கு இடையே தொடர்ந்து நடக்கிறது.

''முத்தத்தைக் கொள்க முழுப்பயத்தில்
[ஒப்படைத்த
சித்தத்தை வாங்கிச் செலுத்துங்கள்
[இன்பத்தில்.'

"சாரல் அடைவோமே, காதலுக்குத்
.தக்க இடம்
சாரலும் தண்மலை நாயகியைச் சாரக்
குயில்கூவிக் கொண்டிருக்கும் ....."

என்று 'முத்தம் தர அடைந்தது' எப்படி என்ற ஒரு துணைக்கரு கடைசிவரைக்கும் வரும்படி பாடியிருக்கிறார் பாரதிதாசன்.

பாரதிதாசன் கலையில் இப்படிப்பட்ட ஒரு தோரணை (அதாவது புனைவியல் காட்சியமைப்பைப் பாலுணர்ச்சியோடு பாடுவது) அமைந்திருக்கிறது. அமையக் காரணம் என்ன என்று மேலே சுட்டிக் காட்டினேன். காரணம், சமயத்தாகம் முக்கியம் இல்லாத, பழய சாத்திரங்களின் நம்பிக்கைகள் தாக்கம் தரவேண்டாத மனிதப் பயணத்தில், புலன்களுக்கு வேண்டிய புனைவியல் காட்சியும் உடல்தசைக்கு வேண்டிய பாலுணர்ச்சியும் கவிஞர் பாரதிதாசனால் விரும்பப்பட்டதே ஆகும்.

பாரதிதாசனின் இந்தத் தோரணைக்கு வேறு பல எடுத்துக்காட்டுகள் தருவதை இங்கே குறைத்துக் கொள்கிறேன். 'புரட்சிக்கவி'யில் நிலா வர்ணனை பலருக்கும் தெரிந்ததுதான்.

"நீலவான் ஆடைக்குள் உடல்மறைத்து
நிலாவென்று காட்டுகின்றாய்
[ஒளிமுகத்தைக் !
கோலமுழு தும்காட்டி விட்டால் காதற்
கொள்ளையிலே இவ்வுலகம் சாமோ!

ஒரு புனைவியல் காட்சியில் பாலுணர்ச்சியைத் தருகிற தோரணை இது. பாரதிதாசன் கலையை இந்தத் தோரணையில் வழிதொடர்ந்து வருகிறார்கள் அவருடைய கவிதா மண்டலத்தைச் சார்ந்த இளங் கவிஞர்கள் அவரை விடவும் கூடுதலாகவே புனைவியல் காட்சியைப் பாலுணர்ச்சியோடுபாடிக் கொண்டிருக்கிறார்கள். இன்றைய திரைப் படப் பாடல்கள் இந்தத் தோரணையில் மேலும் கூடுதலாகப் போய்க்கொண்டிருக்கின்றன.

பாரதிதாசனிடம் இந்த ஒரு தோரணை ஏதோ ஒரு பக்கம்தான். ஆகவே இதை வைத்து 'அழகின் சிரிப்பை'க் குறைவான மதிப்பீட்டில் நோக்கப்படாது. முழு விளைவின் ஆய்வில் 'அழகின் சிரிப்பு' கலைத் தன்மையான படைப்பு என்பது ரொம்ப உண்மை. அதின் கலைத் தன்மையை நான் சந்தேகிக்கவில்லை. ஆனல் அதில் பாரதிதாசனுடைய பார்வையிலுள்ள குழம்பல் தெரியத்தான் செய்கிறது.

கவிதை ஆய்வுடைய ஒரு சிலர் பாரதிதாசன் புனைவியல் காட்சியில் பாலுணர்ச்சியைத் தருகிற தோரணையில் எழுதிய இடங்களை எல்லாம் அப்படிச் சொல்லக்கூடாது என்றும், சங்க காலத்திய அகத்துறைப் பாட்டுக்கள் சிலவற்றைப் போல அவை அமைந்தன என்றும் கருத முற்படலாம். சங்கப் பாட்டுக்களின் செவ்வியல் தோரணை உடல் தசைக்கு வேண்டிய பாலுணர்ச்சியைத் தூண்டுவது அல்ல என்று அவர்களுக்குப் பதில்கூறவிரும்புகிறேன். 'வள்ளிப்பாட்டு' ஒன்று எழுதிய பாரதியின் அந்தத் தோரணை கேள்விக்கு இடமாகி விட்டதை நாம் இங்கே மறக்க முடியாது.

கவிதை உலகு இன்று புதுத் திருப்பத்தில் மாறியிருக்கிறது. மனிதப் புலன்களுக்கு ஒரே தடுமாற்றம் தரும் வகையில் எழுதக்கூடாது; அதிகப்படி பாலுணர்ச்சியின் தற்காலச் சூழ்நிலையை ஒரு ஏளனத் தொனியான அங்கதத்குறிப்பில் எழுதவேண்டும். இந்தக் கலைப்போக்கில் இன்று எழுதுகிறவர்கள் ந. பிச்சமூர்த்தியும் சி. மணியும்.

திட்டம்

கருணைகரச் சிற்பி
கருங்கல் மலை
கண்டான் :

வாலிபமும்,
கற்பனையும்,
விரலின் துறுதுறுப்பும்
விசுவ ரூபச் சிலைசெதுக்க
விரைந்தன :

ஊணற்று
உறக்கமற்று
உடம்பின் கவலை யற்று
காலக் கணக்கற்று,
கனவுக் கோலத்தை
கைவழி
காட்டக்
கல்லும் கரைந்தது .
கருமுகில் வெளுத்தது ;
அங்கங்கள்
ஒவ்வொன்றும்
அழகுபெற
ஐந்தாண்டு.
....
ஐந்தைந்தாண்டுகள்
பல பறந்தன.
....
அதிசயம் கேள்வியுற்றார்
அயல் நாட்டு யாத்ரீகர்
புகைப்படம் பிடிக்கப்
படையாக வந்தார் !
....
விண்ணிடித்து
வளர்ந்த ரூபம்
கண்ணையிழந்து
குருடாக——

காலடியில்
எலும்புக்கூடு !

தி. சோ. வேணுகோபாலன்

பத்திரிகைகளின் உத்தேசம்

சி. சு. செ.

வ. ரா. ஒரு தீர்க்கதரிசி. அவர் சொன்னார் :

'கூட்டிலிருந்து விடுபட்ட கிளிக்கு காடு இருக்கிற இடம் தெரியாது. அது பறந்துபறந்துதவித்து இரை தேடத் தெரியாமல், மீண்டும் வேட்டைக்காரனுடைய கண்ணியில் அகப்பட்டுக் கொள்ளலாம். அதைப்போலவே, அடிமைத்தனத்திலிருந்து விடுபட்ட நம்மவர்கள், சுதந்திரத்தின் பெருமையை உணராமல் வரன் முறையின்றி காரியம் செய்ய எத்தனிக்கலாம்.'

இதை சொல்லிவிட்டு அவர், 'மனிதனுடைய மாண்பு கெடாமல் வாழக்கூடிய வகைகளை பத்திரிகைகள் ஆராய்ச்சி செய்ய வேண்டும்' என்றும் 'மனித நாகரீகப் பண்பில் எப்படியெல்லாம் உயர முடியுமோ அவைகளை எல்லாம் எடுத்துரைக்க (அவைகள் எவ்வளவு கசப்பாக இருந்தாலும் சரியே) பத்திரிகைகள் பின் வாங்கலாகாது' என்றும் குறிப்பிட்டார். சுதந்திரம் பெற்று மூன்று ஆண்டுகளுக்குள் வ. ரா. இதை எழுதி இருக்கிறார். அந்த மூன்றே ஆண்டுகளில் அவர் மறைந்தும் விட்டார். எனவே அவருக்குப்பின் இந்த பதினன்கு ஆண்டுகளில் சுதந்திர இந்தியாவில் அதிலும் நம் தமிழ் நாட்டில் பத்திரிகைகள் அவர் விரும்பிய மனித மாண்பு பெருகவும். மனித நாகரீகப் பண்பு உயரவும் என்ன செய்து வந்திருக்கின்றன என்பதை அவர் பார்க்க முடியாமல் போய்விட்டது. நாம் பார்த்து வருகிறோம்.

சுதந்திரம் பெறுமுன் நம் தமிழ் நாட்டுப் பத்திரிகைகள் இது சம்பந்தமாக என்ன செய்திருக்கின்றன என்று முதலில் பார்த்தோமானல் பின்னர் தற்போதய நிலைமையை கணிக்கப் பார்க்கலாம். பத்திரிகைகள் என்கிறபோது நான் தினசரி செய்திப் பத்திரிகைகளை மட்டும் குறிப்பிடவில்லை. கலை, இலக்கியம், சமூகம், தத்துவம் பற்றிய கருத்துக்களை அவ்வப்போது கொடுத்து மொழிக்கு தொண்டு செய்திருக்கும் அந்த காலத்திய சஞ்சிகைகளை முக்கியமாக குறிப்பிடுகிறேன். அந்த பத்திரிகைகளின் உத்தேசம், அவை கையாண்ட அம்சங்கள், எழுதின போக்கு இவைகளைக்கொண்டு நாம் அன்றய சாதனையை மதிப்பிட முடியும். 1896ல் சென்னையில் சுவாமி விவேகானந்தரால் ஆரம்பிக்கப்பட்டு வத்தலக்குண்டு பி. ஆர். ராஜம் அய்யரை ஆசிரியராகக் கொண்டு வெளிவந்த 'பிரபுத்த பாரதா' அல்லது 'எவேகண்டு இந்தியா' (விழிப்புற்ற இந்தியா) என்ற இங்கிலீஷ் மாதப் பத்திரிகையின் முதல் ஏட்டின் 'நாம்' என்ற தலையங்கத்தின் பின்வரும் வரிகளை மொழி பெயர்த்துத் தருகிறேன்.

"நம் எல்லோருக்கும்' தூங்கும் அழகியின் கதை தெரியும். மந்திரத்தால் கட்டுப்பட்டு நூறு வருஷகாலம் ஒரு அரண்மனையில் அவள் தூங்கினதும் அவளைச் சுற்றி ஒரு வனந்திரமே வளர்ந்துவிட்டதும் கடைசியில் ஒரு இளவரசனல் அவள் சாபம் நிவர்த்தியாகி அவளைமணந்துகொண்டதும் கதை. இந்தியாவை அந்த தூங்கும் அழகிக்கு ஒப்பிடலாம். வெகு காலம் தூங்கிவிட்டாள் இந்தியா. குழப்பும் சமூக, அரசியல் மத சித்தாந்தங்கள் அவளைச் சுற்றி காடாக வளர்ந்துவிட்டன. அவள் தூங்கப் போன போது இப்போது அவளை காதலிக்கும் நவீன நாகரீக உலகம் என்ற ராஜகுமாரன் இல்லை. தற்போது அவர்கள் காதல் வளர்கிறது, காடுகள் சுத்தமாகின்றன. நாம் குறிப்பிடுகிற விழிப்பு தூக்கத்திலிருந்து விழித்து, ஒரு புது உத்வேகத்துடனும், பலத்துடனும் திரிந்து சண்டைக்குப் புறப்படும் ஒரு கழுகின் விழிப்பாக இருக்காது. கேட்பவர் நெஞ்சை தன் இனிய இசையால் உருக்கும் ஒரு வானம்பாடியின் விழிப்பாக இருக்கும். ஏற்கெனவே நம் தாய் நாட்டின் செய்தி, சமூக அரசியல் ஜ்வரத்தால் எரியும் நாடுகளுக்கு போய் அவர்களுக்கு இதம் தந்திருக்கிறது. அந்த செய்தியை பரப்பும் பணியாகவும், வெகு நாளய தூக்கத்துக்குப் பிறகு புதுசாக விழிப்புற்ற நம் நாட்டில் இயல்பாக பரவி இருக்கிற மங்கலை விலக்க உதவுவதாகவும் இருப்பதுதான் நமது பத்திரிகையின் அவா.'

இந்த வரிகள் அன்றய நம் நாட்டு நிலைமை தெரிவிப்பதுடன் பத்திரிகை எதை நோக்கமாகக் கொண்டு செயல்பட வேண்டி இருந்தது, செய்தது என்பதையும் காட்டுகின்றன. காந்தி நாட்களில் சுதந்திர உதய நாட்களை நாம் பார்க்க முடிந்தது போல் விவேகானந்தர் நாட்களில் தத்துவ கலாச்சார ரீதியாக ஒரு விழிப்பை அந்த காலத்தவர் பார்க்க முடிந்திருக்கிறது. எனவே அந்த துறையில் பத்திரிகை ஈடுபட முனைந்திருக்கிறது. 'பிரபுத்த பாரதா 'பத்திரிகை இந்த உத்தேசத்துக்கு ஏற்ப தன் பக்கங்களில் உள்ளடக்கத்தை தேர்ந்தெடுத்துக் கொண்டு முதல் பக்கம் முதல் கடைசி பக்கம்வரை வேறு எவ்வித அக்கறையும் காட்டும் பராக்குக் காட்டாமல், படிப்பவர் மனதில் படித்து முடித்ததும் ஆழ்ந்த கருத்துக்களால் பாதிக்கப் பட்ட ஒரு சிந்தனைப் போக்கை ஏற்படுத்த முடிந்திருக்கிறது.

பிரபுத்த பாரதா கொண்டிருந்த உத்தேசத்தைப் போலவே 1092ல் ஆரம்பிக்கப்பட்ட 'விவேக சிந்தாமணி' மாதப் பத்திரிகை 'விவேக சிந்தாமணி யென்ற பெயருக்கேற்றபடி இதில் விவேகத்தை விளக்கக்கூடிய அற்புத விஷயங்கள் இருக்கும். இக்காலத்துக்கேற்படி தேசாபிமானம் பாஷா ஞானம், நீதிபோதம், வேதாந்த சாரம், சுதேச, விதேச சரித்திரங்கள், மஹாத்மாக்களின்

அமிருத வசனங்கள், பகவான் அர்ச்சுனனுக்குப் போதித்த நித்யானுகூல சாதனங்கள், அப்போ தப்போது நடக்கும் விசேஷ ஸம்பவங்கள் ஆகிய இவைகள் அடங்கப் பெற்றுச் செந்தமிழ் நடையில் எழுதப்பட்டு தமிழ் நாடெல்லாம் ஜ்வலித்து வரும்' என்று தன் உத்தேசத்தை வெளியிட்டு அதுக்கு ஏற்ப தன் உள்ளடக்கத்தை கையாண் டிருக்கிறது. பத்திரிகா தர்மத்தைப்பற்றி எழுதி யுள்ள ஒரு தலையங்கத்தில், 'பத்திரிகை வயிற்று வளர்ப்புக்காக ஏற்பட்டதல்ல. பொதுஜன விர்த் திக்காக ஏற்பட்டதே. பொதுஜன க்ஷேமத்தை நாடி பொதுவாய் நற்கதியடைய உழைப்பவர்கள் ..... அவசியம்' என்று கூறி பத்திரிகா தர்மம்பற்றி மேல்நாட்டு கருத்துக்களை விவரித்து அதை ஏற்று நடந்து அந்த யோக்யதை பெற தான்பதினெட்டு ஆண்டுகளாக உழைத்து வருவதாக குறிப்பிட் டிருக்கிறது. அன்றய ஒரு தமிழ் மாதப் பத்திரி கையின் உன்னத நோக்கத்தை நாம் அதன் உத்தே சத்தில் மட்டும் இல்லை, அது செயல்பட்டு வந்த முறையிலும் பார்க்கிறோம்.

இதுக்குப்பின் 1908ல் 'விவேக சிந்தாமணி' போலவே உத்தேசத்துடன் 'விவேக போதினி' என்ற மாதப் பத்திரிகை தன் முதல் இதழில் 'ஸ்வகீயம்' என்ற தலையங்கத் தலைப்பில் பின் வரு மாறு தன் உத்தேசத்தை காட்டிக்கொண்டது.

'பஞ்சமும், பிளேகும், கொலையும், கொள்ளை யும், நரசோர அகிருத்தியமும் கலகக் குழப்பமும் ஒன்றன்பின் ஒன்றாய் உண்டாகும் இக்காலத்தில் தேச நண்பர்களுக்குத் தொண்டு புரியும் நல்லறி வுச் சுடராய் விளங்கக் கூடியதும் விவேகாமிரு தத்தை அவரவர்களுக்கு ஊட்டி...பாஷானுகூலத் திற்கேற்ற வண்ணம் புதிய புதிய பாடங்களை அன்னார்க்கு கற்பிக்கக்கூடியதும் இன்னும் இவை போன்ற செப்புதற்கருமையான பல விஷயங்கள் பொலிந்து நடமாடி நம் தேச வாஸிகள் மேன்மை யடைவிக்கக் கூடியதுமான பத்திரிகை ஒன்றில்லா ததை பெருங்குறையாக வெண்ணியும் இப்போ துள்ள ஊக்கத்துடன் உழைக்கும் சிற்சில பத்திரி கைகளால் உண்டாகும் பலனை இப்பத்திரிகையினு லும் அணுவளவாவனும் நம் சகோதரர்கள் அடை யட்டும் என்று எண்ணி விவேக போதினி என்னும் பெயர் பூண்ட இப்பத்திரிகையை முன் கொண்டு வரத்துணிந்தோம்.

'விவேக போதினியில் கல்வி, கைத்தொழில்' வர்த்தகம், பயிர்த்தொழில், பெரியோர் சரித்திரங் கள், இதிஹாஸ புராணதிஸாரங்கள், பாஷாபி விருத்திக் குரித்தான இலக்கிய இலக்கண விஷ யங்கள் நீதியும் அறிவும் புகட்டும் நவீன நன்னெ றிக் கதைகள், நாடகங்கள் ஆசார சீர்திருத்தா மிச சம்பந்தமான பொதுக் குறிப்புகள், உப யோகமான விஷயங்கள் இவைகள் அனைத்தையும் மத சம்பந்தமான கலகங்களுக்கும் வீண் விதண் டா வாதங்களுக்கும் இடம் கொடாது எழுதியும் ஆப்த நண்பர்களையும் விசுவாசிகளையும் கொண் டெழுதி வைத்தும் உழைக்க வேண்டுமென்பதே எமது முதல் நோக்கமாகும்.'

மேலே குறிப்பிட்ட மூன்று பத்திரிகைகளின் உத் தேசத்தையும் அவைகளின் உள்ளடக்கத்தையும் இன்று படித்துப் பார்க்கிறபோது. அவைகளது அந்தரங்கசுத்தி எவ்வளவு உயர்ந்த தரத்தில் இருந்திருக்கிறது என்பதை உணர முடிகிறது. தத்துவம், கலாச்சாரம், பொது அறிவு சம்பந்த மான கட்டுரைகள் நிறைந்து காணப்படுகின்றன. அறிவு வளர்ச்சிக்கு பயன்படக்கூடியதையேஅவை கள் வலியுறுத்தி இருக்கின்றன. ஒரு விகடப் போக்கான வரி கிடையாது. ஒரு நுனிப் புல் கருத்து கிடையாது. நமது மத, கலாச்சார நோக்கு ஓங்கி இருக்கிறது. இவைகளில் தமிழ் மொழியை வளர்க்கும் அக்கறையும் காண்கிறது. ஆனால் இவைகளில் நாட்டின் தேசீய விழிப்பை உண்டாக்கும் எழுத்துக்கு இடம் கிடைக்கவே இல்லை. எங்கேயாவது ஒன்றிரு வரிகளில் பிரஸ்தா பத்துக்கு மேல் எதுவும் கிடையாது

என் கையில் அடுத்து கிடைத்தது 1916, 1919ல் சுப்ரமண்ய சிவா பொறுப்பில் முறையே நடைபெற்ற பிரபஞ்சமித்திரன், இந்திய தேசாந் திரி இரண்டும். தேசாந்திரியின் முதல் இதழ் தலை யங்கத்தில் பின்வரும் வரிகள்:

'தமிழுலகிலே இப்போது, அதுவும் சென்ற சில ஆண்டுகளாக, பத்திரிகைகள் பரவி வந்த போதிலும் சுமார் 1½ கோடி தமிழர்களுக்கு அவை போதா வென்றே கூறலாம்...நம் தமிழ்த் தாய் நாடு மேம்பட வேண்டுமானுல் உலகிலே சீரும் செல்வாக்கும் நிறைந்து விளங்க வேண்டுமானுல் எத்தனை பத்திரிகைகள் ஏற்பட்டாலும் போதா வாம். இந்தியாவில் மாத்திரமல்ல, உலகெங்க ணும் இந்திய ஜாதியின் பெருமை பொலிந்து விளங்க வேண்டுமென்று நாம் விரும்புகிறதினுல் நாம் இந்திய தேசாந்திரி என வெளிப் போந் திருக்கிறோம்.

'ராஜிய விஷயங்களிலே நமக்குள்ள அபிப்ரா யத்தைத் தெரிவித்து விடுகிறோம். பிரிட்டிஷ் ஏகாதிபத்தியத்துக்குட்பட்ட ஸ்வராஜ்யமடைய வேண்டுமென்பதே, குடியேற்ற நாடுகளினுடை யது போன்ற ஸ்வதந்திரமடைய வேண்டுமென் பதே நமது நோக்கம். பிரிட்டிஷ் அரசரை நாம் அரசராக ஒப்புக்கொள்கிறோம். ஆனால் எந்த ஜன சமூகத்துக்குக் கீழும் அடங்கி இருக்க நாம் பிரியப் படவில்லை. அடிமைத்தனமென்பது மிருகங்கள் கூட விரும்பாத ஒரு விஷயமாம். நாம் எந்தக் கக்ஷியையும் சேர்ந்தவர்களல்லர். நமது பாரத நாடு எவ்விதத்திலேனும் மேம்பட்டு உலகத்தின் முன்னணியில் நிற்க வேண்டுமென்பதே நாம் இர வும் பகலும் செய்துவரும் பிரார்த்தனை. இதனுல் நாம் பலன்களை கருதாமல் சுகம் உண்டாயினும் சரியே, துக்கம் உண்டாயினும் சரியே சாட்சாத் ஈஸ்வரனையே சாக்ஷியாக வைத்துக்கொண்டு மனச் சாக்ஷிக்கு விரோதமில்லாமல், தேச நன்மை, இதனுல் உலக நன்மை இவ்விரண்டு நன்மைகளை யும் மாத்திரம் கருதி வேலை செய்து வருவோம். பாரதமாதாவென நாம் பணிந்து வணங்கும் மகா சக்தி நமக்கு என்றென்றும் கிருபை புரிவாளாக!

முந்தின மூன்று பத்திரிகைகளின் உத்தேசத்துக்கும், குரலுக்கும், மொழிக்கும் இதுக்கும் உள்ள வித்யாசத்தை நாம் பார்க்க முடிகிறது. சுப்ரமண்ய சிவாவும் நமது கலாச்சாரம், மதம், தத்துவம், இவைகளில் அசையாத நம்பிக்கை வைத்தவர். ஆனல் அவர் தன் பத்திரிகையில் அழுத்தம் கொடுத்தது தேசியம். மற்ற மூன்றும் தத்துவம், பொது அறிவு, ஒழுக்க வாழ்வு இவைகளை வலியுறுத்த இந்த பத்திரிகை தேசிய உணர்வை, சுதந்திர உணர்ச்சியை வலியுறுத்தியது. நாட்டு நல்வாழ்வுக்கு வழிவகை கோலுமுன் முதலில் சுதந்திரத்தைப் பெற வேண்டும் என்ற நினைப்புக்குத் தான் முதலிடம். இதே நாட்களிலும் முன்னும் பின்னும் பாரதியாரின் இந்தியா பத்திரிகை, மற்றும் சில தேசிய பத்திரிகைகள் இதே உத்தேசங்களுடன் தோன்றின. அந்த பத்திரிகைகளின் முதல் தலையங்கங்கள், உத்தேசங்கள் எனக்கு தற்போது தெரிய வரவில்லை. இருந்தாலும் நாம் யூகிக்க முடியும் தேசியம் ஒரு சக்தியாக உருவாவதையே பத்திரிகைகள் தங்கள் நோக்கமாகக் கொண்டிருந்தன. 1920ல் டாக்டர் பி. வரதராஜுலு நாயுடுவை ஆசிரியராகக் கொண்டு வெளி வந்த தமிழ் நாடு வாரப் பத்திரிகையின் முதல் தலையங்க வரிகள் :

'தேசபக்தி தெய்வீகமானது. சூரியனுக்கு களங்கமில்லை. நீருக்கு நிறமில்லை. களங்கமற்ற தேசபக்திக்கு அழிவில்லை. தேசபக்தி உள்ளத்திலிருந்து உண்டாக வேண்டும் ....தேச பக்திக்கு பயமில்லை, அழிவில்லை ..அவனை ஆயுதம் வெட்டாது. தீ எரிக்காது. நீர் நினைக்காது. காற்று உலர்த்தாது. உயிர்விடும்போதும 'சுயராஜ்யம்' 'சுதந்திரம்' வந்தே மாதரம் என்ற மகாமந்திரம் அவனது மனத்திலிருந்து நீங்காது. சிங்கத்தை எதிர்க்கும் தீரமுள்ள தேச பக்தன் ஆட்டுக்குட்டிக்கு பயப்படுவானே?...புதிய சக்தியையும் திரண்ட ஊக்கத்தையும் பெற்று தமிழ்நாடு வெளி வருகிறது . நாம் நமது கடமையைச் செய்துவருவோம்.

இந்த தொனியும்மொழியும் 'இந்திய தேசாந்திரிக்கும் மேலோங்கின குரல். இவ்வளவு சுருங்கின காலத்துக்குள்ளே பத்திரிகைகள் தங்கள் உத்தேசத்தை காலத்துக்கு ஏற்றபடி நிலைமைக்குத் தக்கபடி சட்டென திருப்பம் விளைவித்துக்கொண்டிருக்கின்றன என்பதைப் பார்க்கிறோம். இந்தத் துறையில் தேசபக்தன் (திரு. வி. கல்யாணசுந்தர முதலியார் ஆசிரியர்) சேர்ந்தது.

இந்த பத்திரிகை தொனி மாறிக்கொண்டே வந்தாலும் அவர்களது அடிப்படையான பார்வை நாடு, நாட்டு நலன், மக்கள் வாழ்வு, பண்பு, மொழி இவை பற்றியதாக இருந்திருக்கிறது. மக்கள் என்ன கேட்கிறார்கள் என்பதைவிட அன்றைய மக்களுக்கு தாங்கள் சொல்லவேண்டியது இது என்பதை கடமையாகச் செய்தார்கள். சொரணையே இல்லாமல் இருந்த ஒரு சமூகத்தை தட்டித் தட்டி எழுப்பவேண்டி இருந்தது. பிறகு வந்தது காந்திய சகாப்தம். அது நாட்டின் பொது வாழ்வு மட்டுமில்லை, தனி மனித வாழ்வையும் திரியிட்டுத் தூண்டியது.

இந்த காலத்திய பத்திரிகைகளில் என் கண்ணில் பட்டவை வ. வே. சு. அய்யரின் பாலபாரதி, அ. மாதவையாவின் பஞ்சாமிர்தம் ஆகிய பத்திரிகைகளின் சில ஏடுகள் இவைகளின் முதல் ஏடுகள் கிடைத்திருந்தால் அவைகளின் உத்தேசத்தை அவைகளின் பக்கங்களிலிருந்தே அறிந்திருக்கலாம். இப்பொழுது நான் ஊகித்துப் பார்க்க முடிகிறது, அவைகளின் உள்ளடக்கத்தைக் கொண்டு. இரண்டும் சமகால ஏடுகள். இரண்டு ஆசிரியர்களும் ஒரே ஆண்டில் மறைந்தவர்கள். இரண்டு பத்திரிகைகளும் மிகக் குறைந்த கால அளவே இரண்டு, மூன்று ஆண்டுகள் அளவுக்கே வந்து நின்றுவிட்டன. தத்துவம், பொது அறிவு, மொழி வளர்ச்சி, கலாச்சாரம், ஒழுக்க வாழ்வு இவற்றை நோக்கமாகக் கொண்ட விவேக சிந்தாமணி போன்ற பத்திரிகைகள், தேசிய எழுச்சியை முதன்மையை நோக்கமாகக் கொண்ட இந்திய தேசாந்திரி, தமிழ்நாடு போன்ற பத்திரிகைகள் இவைகளிலிருந்து ஒரு திருப்பம் காட்டுவனவாக இந்த மாதப் பத்திரிகைகள் இருப்பதை பார்க்கிறோம். இலக்கியத்துக்கு கூடுதலான இடம் முதல் முதலாக கிடைத்திருப்பது இந்த பத்திரிகைகளால்தான். ('பிரஜானுகூலன்' பத்திரிகையை நான் பார்க்காததால் அதைப் பற்றி எனக்கு அபிப்பிராயம் சொல்ல முடியவில்லை) நாவல், சிறுகதை இலக்கிய விமரிசனம், மொழிபெயர்ப்பு இவற்றுக்கெல்லாம் இடம் கிடைத்தது. சுதேச மித்திரன் வாரப்பதிப்பையும் சேர்த்துக்கொள்ள வேண்டும் இந்த ரகத்தில்.

வ. வெ. சு.வும் மாதவையாவும் தமிழ் இலக்கியம் தற்காலப் பாங்கானதாக ஆகவேண்டும் என்ற அக்கறை கொண்டிருந்தவர்கள். இலக்கியம் மூலம், வ. ரா. சொன்ன மாண்பும் பண்பும் பெறச் செய்யமுடியும் என்று கருதியவர்கள். எனவே இதுவரை தமிழகத்தில் இருந்து வந்த பத்திரிகைப் போக்கிலே ஒரு திருப்பம் இப்போது. பின்னல் இலக்கியத்துக்கு அதிக இடம் அல்லது இலக்கியத்துக்கே இடம் கொடுக்க இருந்த பத்திரிகைகளுக்கு இவை முன்னோடிகள். 1925-ம் ஆண்டோடு இவை நின்றுவிட, அடுத்து பத்திரிகைகள் குரலில் நாம் பார்த்த மாறுதல் 1930 சமயத்தில்தான். உப்புச் சத்யாக்ரக, சட்ட மறுப்பு காலம். அந்த காலத்திய பத்திரிகைகளின் உத்தேசம், செயல்முறை பற்றி அடுத்து பார்க்கலாம்.

(216ஆம் பக்கத் தொடர்ச்சி)

இரண்டாங் களத்திரத்தினால்தான் அவன் சந்ததி விருத்தியடைய வேண்டும் என்றும் தீர்மானமாக கூறிவிட்டார்.

ஏற்கனவே மனம் முறிந்திருந்த அப்பாவி நாராயணன் அவர்கள் வலையில் இப்பொழுது வசமாக சிக்கிக் கொண்டான். தனிப்பட்ட சரஸ்வதி தவியாத் தவித்துக் கொண்டிருந்தாள்.

சென்னையில் 'சிவில் சர்ஜன்' ராமசுப்பையர் கோமளம்மாளுக்கு தூரபந்து. அவருக்கு வயதான ஒரு பெண் கலியாணமாகவிருந்தாள். ஒரே பெண். நிறைய பணம். கோமளம்மாள் எப்படியோ தனக்கு வேண்டியவர்களுக்கு கடிதம் எழுதி ராமசுப்பையரின் பெண்ணை தன் பிள்ளைக்கு இரண்டாந்தாரமாக ஏற்பாடு செய்துவிட்டாள்.

சில நாட்களில் இந்த சமாசாரத்தை மெல்ல நாராயணன் காதிலும் எட்டவிட்டாள். நாராயணன் ஆலோசித்துப் பார்த்தான். முடிவில் அவன் குழந்தை வேட்கை வென்றது. சரஸ்வதியின் கதியை பற்றி அவன் கவலைப்படும் காலமெல்லாம் மாய்ந்து மறைந்தது. அவள் ஒரு பெண்—தன் மனைவி—தன் ஜீவிய காலம் முழுவதும் தன் வாழ்க்கைக்கு துணையாக இருக்க உரிமை பெற்றவள்—என்ற எண்ணமெல்லாம் காற்றில் பறந்தது. மறுகல்யாணம் செய்துகொள்ள நிச்சயித்தான்.

பெண்ணை பார்த்துவிட்டு நிச்சயதார்த்தம் செய்துகொள்ளலாம் என்று நாராயணன் சொல்லவே அவன் தங்கையும் தாயாரும் அதற்கு ஒப்புக்கொண்டனர்.

சரஸ்வதி இந்த விவகாரத்தில் எந்த பாத்யதையும் எடுத்துக் கொள்ளாவண்ணம் ஜானகி ஜாக்கிரதையாக இருந்தாள். அவள் யார், இதிலெல்லாம் தலையிட!

ஒரு நல்ல நாள் பார்த்து எல்லோரும் சென்னைக்குப் புறப்பட்டார்கள். புறப்படும் முன்கூட, சரஸ்வதியிடம் நாராயணன் இதைப்பற்றி அவள் அபிப்பிராயத்தைக் கேட்கவில்லை. ஆனால் ஒரு வார்த்தை மாத்திரம் கூறினான். ''சரஸ்வதி! நான் என்ன செய்யட்டும்? உனக்கு அவ்வளவுதான் அதிர்ஷ்டம்'' என்ற ஒரே வார்த்தைதான்.

சரஸ்வதி பதில் பேசவில்லை. மௌனமாயிருந்தாள். அவளைக் கலக்காமல் நடந்தேறிய விஷயங்களெல்லாம் அவளைத் துன்பப்படுத்தவில்லை. தன் கணவன் சொல்லிய வார்த்தை மாத்திரம் அவள் ஹிருதயத்தில் முள்போல் தைத்தது.

தனது ஆபீஸ் அறையில் ராமசுப்பையர் ஒரு நாற்காலியில் உட்கார்ந்திருந்தார், அவருக்கெதிரே மற்றொரு நாற்காலியில் நாராயணன் உட்கார்ந்திருந்தான். இருவரும் சாப்பாடு முடிந்து வெற்றிலை போட்டிருந்தார்கள்.

''ஆமாம், ஒரு கலியாணம் செய்து கொண்டு மனைவியிருக்கும்போது இரண்டாந்தர கலியாணத்திற்கு என்ன அவசியம்?'' என்று சம்சயத்துடன் ஆரம்பித்தார் டாக்டர்.

அவருக்கு அவ்வளவாக இந்தக் கலியாணத்தில் அபிப்பிராயமில்லை. கலியாண தரகர் ஒருவர், இரு பக்கத்தாருக்கும் நெருங்கிய சம்பந்தமுள்ளவர் தூண்டுதலால் இவ்வளவு தூரத்திற்கு வந்தது நிலைமை.

''இல்லை. என் முதல் கல்யாணத்தால் எனக்கு சந்ததி ஏற்படவில்லை'' என்று தடுமாற்றத்துடன் பதிலளித்தான் நாராயணன்.

''ஆனால் பிள்ளை பிறப்பதற்கென்று மற்றொரு கல்யாணம் செய்துகொண்டால் மாத்திரம் கட்டாயமாக குழந்தை உண்டாகும் என்பது என்ன நிச்சயம்?''

''என் ஜாதகப்படி அப்படித்தான். ஜோசியர் இரண்டாம் தாரத்தின் மூலமாகத்தான் எனக்கு சந்ததி விருத்தியுண்டு'' என்று சொல்லியிருக்கிறார்.

''பேஷ், பேஷ், நல்ல பேர்வழி ஐயா நீர்? இந்த காலத்தில் ஜோசியம் யார் ஐயா பார்க்கிறார்கள் இதற்கெல்லாம்? அன்றியும் ஜோசியன் சொல்லிவிட்டால் அதுவே தேவ வாக்கோ?'' என்று சொல்லி கொல் என்று சிரித்தார் டாக்டர்.

நாராயணன் முகம் வாட்டம் அடைந்தது, அவமானத்தால் குன்றியதுப்போல.

''இல்லை. எங்களூர் லேடி டாக்டர்கூட அந்த பெண்ணை பரிசோதித்துவிட்டார்.''

''என்ன சொன்னார் அந்த லேடி டாக்டர்?''

''ஏன் அவள் ஒரு மலடி என்றுதான்.''

''சரி, உம்மை பரிசோதித்துக் கொண்டீரா?''

நாராயணன் திகைத்தான். அவன் தலை மாத்திரம் இல்லை என்பதற்கு அடையாளமாக அசைந்து நின்றது.

''ஆனால் இப்படிப்பட்ட சந்தர்ப்பங்களில் நீங்களும் பரிசோதனை செய்துகொள்வது நல்லது என்று தோன்றவில்லையா?'' என்றார் டாக்டர்.

நாராயணன் பதில் பேசவில்லை. ஆனால் அவர் சொல்லியது சிறந்த யோசனை என்று அவனுக்கு புலப்பட்டது. சரஸ்வதியிடம் அவனுக்கு இருந்த அன்பு தலை எடுத்து அவனை கெஞ்சி மன்றாடியது.

டாக்டர் அவனை ஒரு தனி அறைக்கு அழைத்துச் சென்று சோதனை செய்தார். பிறகு தமது அபிப்பிராயத்தை தெரிவிப்பதாகச் சொல்லி, அவனது சிறுநீர், ரத்தம் முதலியவைகளை எடுத்து பத்திரப்படுத்திக் கொண்டார்.

கோமளம்மாளுக்கும், ஜானகிக்கும் இந்த சமாசாரங்கள் தெரிந்தன. கிணறு வெட்ட பூதம் புறப்பட்டதுபோல அவர்கள் கல்யாணத்திற்கு வந்த இடத்தில் இப்படி எல்லாம் நடைபெறும் என்று நினைக்கவில்லை.

மறுநாள் டாக்டர் நாராயணனிடம் ஒரு மடித்த கடிதத்தை கொடுத்துவிட்டு அவசரமாக வெளியே போய்விட்டார்.

கடிதத்தைப் பிரித்துப் படித்தான் நாராயணன். ''நீர் ஒரு மலடு'' என்று எழுதியிருந்தது.

அவன் கண்களில் நீர் பெருகியது. அவனையும் அறியாமல் அவன் வாய்—நீ ஒரு மலடி என்று சரஸ்வதியை விழித்துக் கூறிய அதே வாய் ''நான் ஓர் மலடு'' என்று சொல்லிக் கொண்டது.

ஆனால் அவன் மனசு மாத்திரம் சரசுவதி, நாராயணன் இருவரும் மலடுதான் என்று எண்ணி குமுறியது.

சரஸ்வதி மாமி, நாத்திகளின் சூழ்ச்சியால் மலடாக்கப்பட்டவள் என்பது அந்த கபடற்ற மனசுக்கு எப்படித் தெரியும்.

(214-ஆம் பக்கத் தொடர்ச்சி)

அது வளரவைக்க எனக்கு இது ரொம்பவும் உதவும்.

ஆகவே உங்கள் மூன்றுண்டுச் சந்தாவை, தனி நினைவூட்டுக் கடிதத்துக்கு எதிர்பார்க்காமல், உடனே எனக்குக் கிடைக்கச் செய்ய வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். அதோடு உங்கள் இலக்கிய நண்பர்களுக்கு தெரிவித்து எழுத்துடன் அவர்கள் உறவு கொள்ளச் செய்யவும், உங்கள் ஊர்களில் உள்ள ஏஜெண்டுகளிடம் சொல்லி எழுத்து விற்பனைக்கு எடுத்துக்கொள்ளச் செய்யவும் முயற்சி செய்யும்படி கேட்டுக்கொள்கிறேன்.

இந்த ஏடு தாமதித்து கிடைப்பதுக்கு காரணம், அச்சாபீசில் புதிய அச்சுயந்திரம் அமைப்பு ஏற்பாடு நடந்ததுதான். இந்த ஏடு தாமதமாகி விட்டதாலும், இந்த மாத கடைசி வாரத்தில் கேரள ராஜ்யத்தில் நடக்கும் அகில இந்திய எழுத்தாளர் மகாநாட்டில் நான் பங்கு கொள்வதாலும் ஜனவரி ஏட்டை பொங்கல் சமயத்தில் கொண்டு வரலாம் என்றிருக்கிறேன். இந்த இரண்டு தாமதத்தையும் நீங்கள் பொறுத்துக் கொள்ள வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

— சி. சு. செல்லப்பா

சந்தாதாரர்களுக்கு

இந்த ஏடு கிடைத்ததும் 1966 ஜனவரி முதல் ஆரம்பமாகும் புது ஆண்டுக்கான தங்கள் சந்தாக்களை உடனே அனுப்பி வைக்கும்படி கேட்டுக்கொள்கிறோம்.

ஒரு ஆண்டு ரூ. 6-00
மூன்று ஆண்டு ரூ. 15-00

மறு அறுவடை

சீக்ஃப்ரிட் சாஸூன்

மறதியா உனக்கு அதுக்குள்?......
வாயடைப்பட்ட அந்தநாள் முதல்,
நகரவீதிகள் கடக்கையில்
தடைப்பட்ட போக்குவரத்து போல்
உலக நிகழ்ச்சிகள் உறுமின;
உன்மனதின் பேயலைக்கும் பிளப்பு
வாழ்வென்னும் ஒளிவானில் ஊர்ந்துவரும்
மேகநிகர் நினைப்புகளால் நிறைந்திட்டது;
அமைதிக் காலத்தின் உன் பங்கு பெற்று
இன்பத்தில் திளைக்க, வேலை நீங்கிப்போகிறவன் நீ;
ஆனால் சென்றதெல்லாம் ஒரே மாதிரியே
யுத்தம் ஒரு கேடுகெட்ட ஆட்டமே......
மறதியா உனக்கு அதுக்குள்?......
குனிந்து பார், ஒருபோதும் மறவேன் என்று
கொலைபட்டோர் மீது ஆணையாய் சபதமிடு.

நினைவிருக்கா உனக்கு
மாமெட்ஸ்போர் முனையில் நிலைநின்ற
உனது பயங்கர மாதங்கள்;
காவல் காத்து, செய்தி அனுப்பி குழிகள் தோண்டி,
அலங்கங்கள்மேல் மணல்சாக்கு அடுக்கிய இரவுகள்?

நினைவிருக்கா உனக்கு
எலிகள், முன்வரிசைப் பரிகைகள்முன்
அழுகும் பிணங்களின் வீச்சம்,
பின், அழுக்கு வெளுப்பாய் மோசமான
மழைக் குளிரோடு வந்த உதயம்?

'இதெல்லாம் மீண்டும் நடக்கவா' என்று
ஒருமுறை கேட்டுக் கொண்டாயா நின்று?
நினைவிருக்கா உனக்கு
தாக்குமுன் அந்த செவியறை இரைச்சல் நேரம்
உனதாட்களின் விதி தீர்ந்த சவத்தோற்ற
முகங்களை உன்னிப்பாய் பார்க்கையில்
உன் எரிச்சல், அன்றுன்னை உலுக்கிய குருட்டு இரக்கம்?

நினைவிருக்கா உனக்கு
சாகிற கண்களோடும் தொங்கும் தலைகளோடும்
ஸ்டிரெச்சர் கேஸ்கள் பின்பதுங்கிப் போனதும்,
ஆர்வமும் அன்பும், குதூகலமும் முன்பிருந்த
யுவர்களின் சாம்பல் பழுப்பு முகமூடிகளும்?

மறதியா உனக்கு அதுக்குள்?......
நிமிர்ந்து பார், ஒருபோதும் மறவேன் என்று
வசந்தப் பசுமைமீது ஆணையாய் சபதமிடு.

(சி. சு. செ. மொழிபெயர்த்தது)

LIBRARY 31 MAR 1966

எழுத்து பிரசுரம் வெளியீடுகள்

1.	சொர்க்கத்தில் சம்பாஷணை	வ. ரா.	ரூ.	3-00
2.	வசந்த காலம் (கட்டுரைகள்)	,,	ரூ.	3-00
3.	பதினெட்டாம் பெருக்கு (சிறுகதைகள்)	ந. பிச்சமூர்த்தி	ரூ.	4-00
4.	வழித்துணை (கவிதைகள்)	,,	ரூ.	2-00
5.	அகல்யை (ஓரங்க நாடகங்கள்)	கு. ப. ரா.	ரூ.	4-00
6.	ஆண்சிங்கம் (சிறுகதை)	வல்லிக்கண்ணன்	ரூ.	4-00
7.	சில விஷயங்கள் (கட்டுரைகள்)	சிட்டி	ரூ.	3-00
8.	சத்யாக்ரகி (சிறுகதைகள்)	சி. சு. செல்லப்பா	ரூ.	4-00
9.	மணல் வீடு	,,	ரூ.	4-00
10.	கோடை வயல் (கவிதைகள்)	தி. சோ. வேணுகோபாலன்	ரூ.	1-25
11.	கனவுப் பறவை (சிறுகதைகள்)	கர்ணன்	ரூ.	1-50

விவரங்களுக்கு எழுதவும்

கிடைக்குமிடம் :—

எழுத்து பிரசுரம்

பிள்ளையார் கோவில் தெரு, சென்னை-5.

எழுத்து

புது சந்தா விகிதம்

ஜனவரி 1966 முதல்

ஆண்டுச் சந்தா	ரூ. 6-00
மூன்று ஆண்டுகள்	ரூ. 15-00
வெளி நாடுகளுக்கு	ரூ. 8-00
மூன்று ஆண்டுகள்	ரூ. 20-00
தனிப்பிரதி	50 பைசா

பிரதி இங்கிலீஷ் மாதம்
முதல் தேதி வெளிவரும்

விவரங்களுக்கு :

எழுத்து

19-A, பிள்ளையார் கோவில் தெரு,
சென்னை-5

EZHUTTHU

Tamil literary monthly

ADVERTISEMENT TARIFF

INSIDE PAGE

Full Page	15×20 cms	Rs. 80-00
Half ,,	15×10 / 7½×20 ,,	Rs. 40-00
Quarter ,,	7½×10 / 15×5 ,,	Rs. 20-00
Back cover		Rs. 100-00
Inside covers		Rs. 90-00

Concession for Contract Page

EZHUTTHU

19-A, Pilliar koil St., Madras-5

EZHUTTHU Edited and Published by C. S. Chellappa, from 19-A, Pilliar Koil Street, Madras-5.
Printed by M. Ramanatha Rao for Cenrtal Press, 97, Big Street, Triplicane Madras-5